694
694
694

ஸர்வஜித் ௵
புரட்டாசி ௴

ஸம்புடம் - 6
ஸஞ்சிகை - 9

ஸ்ரீ:

# ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியா

[ஸ்ரீ அஹோபில மடத்துப் பத்ரிகை]



ஸம்பாதகர்: வங்கீபுரம் ஸ்ரீ. வாஸுதேவாசார்யர்

:ப்ரசுரிக்குமிடம்:
நெ. 22, மஹாலக்ஷ்மி தெரு, த்யாகராயநகர்,
சென்னை.

JL
N47.6.9.
189238

September 1947
Vol. 6 No. 9

## விஷய ஸூசிகை


| | | பக்கம் |
|---|---|---|
| 1. | ஸ்ரீ ஸங்கல்ப ஸூர்யோதயம் | 187 |
| 2. | துளஸீ மாஹாத்ம்யம் | 191 |
| 3. | குரவர் குறள் | 193 |
| 4. | பஞ்சாங்க ஸங்க்ரஹம் | 195 |
| 5. | தேவாலயங்கள் | 196 |
| 6. | செய்திகள் | 198 |
| 7. | ஸம்பாதகரின் குறிப்புக்கள் | 200 |
| 8. | காமாஸிகாஷ்டகம் | |


---


## வ்யாஸம் எழுதுபவர்களுக்கு விஜ்ஞாபநம்.

1. எழுதி யனுப்பப்படும் வ்யாஸங்கள், மூன்று அல்லது நாலு பக்கங்களுக்கு அதிகப்படாமல் சுருக்கமாகவும் தெளிவாகவும் இருத்தல் வேண்டும்.

2. ப்சுரப்படுத்தப்படாமல் இருக்கும் வ்யாஸங்க ளெல்லாம், தபால் சார்ஜூக்கு வேண்டிய ஸ்டாம்பு அனுப்பப்படும் பக்ஷத்தில், அவை உடனே திருப்பி அனுப்பப்படும்.

3. அநேக வித்வான்கள் மஹத்தான க்ருபையுடன் வ்யாஸங்களை அனுப்பி, அவைகளை உடனே பத்ரிகையில் ப்ரசுரம் செய்ய வேண்டு மென்று நியமிக்கிறார்கள். பத்ரிகையில் இடம் ஸங்குசிதமாக இருக்கிறபடியால், அவர்களுடை நியமநத்தை அவர்கள் இஷ்டப்ரகாரம் நிறைவேற்ற ஸாத்யப்படாமல் இருகிறது. அவகாசம் ப்ராப்தமாகும் பொழுது அவைகள் யதார்ஹம் ப்ரசுரம் செய்யப்படும். அப்படிச் செய்வதால் ஸம்பவிக்கும் கால விளம்பத்தை அந்த வித்வான்கள் க்ருபையுடன் க்ஷமிக்க வேண்டுமென்று ப்ரார்த்திக்கிறோம்.

ஸம்பாதகர்.



ஸ்ரீ:

ஸ்ரீமதே லக்ஷ்மீந்ருஸிம்ஹபரப்ரஹ்மணே நம:

# ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியா


| ஸம்புடம் 6 | ஸர்வஜித் ௵ புரட்டாசி ௴ | ஸஞ்சிகை 9 |
|---|---|---|


"அஹோபிலே காருடசைலமத்யே
க்ருபாவசாத் கல்பிதஸந்நிதானம் ।
லக்ஷ்ம்யா ஸமாலிங்கிதவாமபாகம்
லக்ஷ்மீந்ருஸிம்ஹம் சரணம் ப்ரபத்யே ॥"

## ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியா

என்னும் ஸ்ரீ அஹோபில மடத்துப் பத்ரிகையைப்பற்றி

## ஸ்ரீ அழகியசிங்கரின் ஆசாஸந அநுசாஸநங்கள்.

ஸ்ரீந்ருஸிம்ஹப்ரியா ஸ்ரீமந்ந்ருஸிம்ஹகருணோத்திதா ।
ஸ்ரீந்ருஸிம்ஹகடாக்ஷேண ஜீயாதாசந்த்ரதாரகம் ॥
ந்ருஸிம்ஹபக்தாநாம் கேஹே கேஹே ஸதா வஸேத் ।
ஸ்ரீந்ருஸிம்ஹப்ரியாஹ்யேஷா ந்ருஸிம்ஹப்ரியயா ஸஹ ॥

[ஸ்ரீ ந்ருஸிம்ஹனுடைய கருணையால் உண்டாகி இருக்கும் இந்த "ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியா" என்னும் பத்ரிகை, அந்த ந்ருஸிம்ஹனுடைய கடாக்ஷத்தாலும் ஸங்கல்பத்தாலும் சந்த்ரன் நக்ஷத்ரங்கள் உள்ளவரையில் அவை போலவே சிறப்புடன் வாழக்கடவது.

நம் ந்ருஸிம்ஹ பக்தகோடிகளின் க்ருஹங்கள்தோறும் இந்த "ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியா" என்னும் பத்ரிகை, ஸ்ரீந்ருஸிம்ஹ ப்ரியையாகிற மஹா லக்ஷ்மியுடன் நித்யமாய் வஸிக்கக்கடவது.]

::o::

ஸ்ரீ:

[illegible]

# ஸ்ரீ ஸங்கல்ப ஸூர்யோதயம்

[7-ம் அங்கம்]

[சென்ற ஸஞ்சிகையின் தொடர்ச்சி]

[ஸ்ரீ. உப. A. V. கோபாலாசார்ய ஸ்வாமி, M.A., B.L.,
அட்வோகேட், திருச்சி.]

இந்த்ரியங்களை, வெளி விஷயங்களில் பட்டி மேய்ந்து திரியாமல் உள்ளொடுக்கிப் பகவானை த்யாநம் செய்து, ஸமாதி ஸித்திப்பதற்காக யம நியம ப்ராணாயாம ப்ரத்யாஹார தாரணா த்யாநங்களான யோக தபஸ்ஸுக்குத் தக்க ஸ்தாநங்களைத் தேடி, அவை கிடைக்காமையால், முடிவில் ஹ்ருதய மென்னும் தன் உள்ளேயே யுள்ள ஸ்தாநமே சிறந்த ஸ்தாந மென்று தீர்மானிக்கப்பட்டது. தீர்த்த ஸ்நாநத்திற்காக என் தூரத்திலுள்ள புண்ய நதிகளைத் தேடவேண்டும்? ப்ரஹ்ம மென்னும் குளிர்ந்த தடாகம் உள்ளேயே இருக்கிறதன்றோ?

"[illegible] ।
[illegible] ॥"

என்று மஹா பாரதத்திற் கூறியபடி, காமத் தீ, க்ரோதத் தீ, மத்ஸரத் தீ முதலிய தாவாக்நிகளால் தபிக்கும் ஆத்மா அத்தீக்களினின்றும் விலகி உள்ளே யுள்ள ஹார்த்த னென்னும் ஶீத தடாகத்தில் மூழ்கித் தாபம் தீர்வதும் முடிவில் பாடப்பட்டது. உள் ஹ்ருதய ஸ்தாநத்தை யோகத்திற்கு ஸ்தாநமாகப் பற்றியது ஸரி. பகவானுடைய அபரிச்சிந்நமான திவ்யஸ்வரூபம் உருவ மற்றது; அது மநஸ்ஸில் த்யாநத்திற்கு உதயமாவது துர்லபம். அவனை திவ்யமங்கள விக்ரஹ விஶிஷ்டனாக த்யாநம் செய்வது ஸுலபம். எந்த விக்ரஹத்தை த்யாநத்திற்கு ஆலம்பநமாகக் கொள்ளுகிறது? பகவானுடைய அவதார விக்ரஹங்கள், உலகத்தையே தம் காட்சியால் உஜ்ஜீவிக்கச் செய்யவேணு மென்கிற கருணை வெள்ளத்தால் அவனால் பரிக்ரஹிக்கப்பட்டன. அந்த விக்ரஹங்களில் தன் ருசிக்கேற்ற ஒரு விக்ரஹத்தை மனத்தில் கருணையால், '[illegible]' என்று ஆச்சர்யமாய் அநுபவித்தபடி, பகவானே சித்ரமாக எழுதவேணும். நாமும் நம்முடைய நினைவைத் தொடர்ச்சியாக ப்ரத்யாவேஶத்துடன் அங்கே வைத்து இன்புற வேணும். நாமும் அபிமுகமாக இருக்கத் தொடங்குகையில், அவனே தனது கருணையால் நமது மநோரத பூர்த்தியைச் செய்கிறான். நம்முடைய ஸ்ம்ருதி ஸம்ஸ்காரமும் ஶில்பியாக ஆகும்படி ப்ரயத்நம் செய்யவேணும். அநுபவித்த வஸ்துவின் வாஸனை தொடர்வது ஸம்ஸ்கார மெனப்படும். இதிஹாஸ புராணங்களில் நேரில் அநுபவித்த மஹர்ஷிகள், தாங்கள் ப்ரத்யக்ஷீகரித்தபடி அவதார விக்ரஹ

சேஷ்டிதாதிகளை இன்பமாய்ப் பாடியிருக்கிறார்கள். ஸ்ரீ தசாவதார ஸ்தோத்ரத்தில் 'ஸ்வயம்ருக்ஷிதோ ஹாவபாவை:' என்று அந்த அவதார நாடகங்களைக் கலியன் முதலிய ஆழ்வார்கள் தங்கள் த்யாநத்தில், திவ்ய தம்பதிகள் தந்த காட்சிகளை அநுபவித்த க்ரமத்தில், நம் எல்லோர்க்கும் இன்ப ஸம்ஸ்காரத்தால் ப்ரத்யக்ஷ ஸமாநாகாரமாய்க் காட்சி ரஸம் ஏற்படும்படி ஸ்வாமி பாடினார். அந்த ச்லோகங்க ளெல்லாம் இந்த அங்கத்தில் சேர்க்கப் பட்டிருக்கின்றன. அந்த ச்லோகங்களின் ரஸங்களைக் கொஞ்சம் இங்கே கூறுவோம்.

ஸ்ரீரங்கம் தசாவதார ஸந்நிதியில் கலியன் எழுந்தருளி அத்யக்ஷணம் செய்துகொண்டிருக்கும் அவதாரத் திருமேனிகளைக் கோயிலில் அநுபவித்துப் பாடியது தசாவதார ஸ்தோத்ரம். 'ஸந்நிதி' என்று முதல் ச்லோகத்தில் பாடியதும் இதைக் குறிக்கும். அந்த ச்லோகம் இந்நாடகத்தில் முதல் அங்கத்தில் ப்ரஸ்தாவனையிலேயே படிக்கப்பட்டது. இந்த நாடகமும் கோயிலில் நிர்மாணம் செய்ததே. ஆயினும் இந்த ச்லோகங்கள் முன்பே கவனம் செய்யப் பட்டுத் தசாவதார ஸ்தோத்ரமா யிருந்தன.

விவேக மஹாராஜர் உத்தரவின் பேரில் ஸம்ஸ்காரன் என்கிற சில்பி, சிந்தை மனம் எனும் உள் மண்டபச் சுவர்களில் இந்தச் சித்ரங்களை எழுத, அவற்றை விவேக ராஜரும் ஸுமதி தேவியும் ஸேவித்து அநுபவிக்கிறார்கள். இந்த அங்கத்திற்கு 'ஸுஹாஸ்ய நியாமணா:' என்று பெயர். இன்னும் கர்ப்ப ஸந்தி நடந்துகொண்டிருக்கிறது. இன்னும் அந்வேஷணம் நடந்து கொண்டிருக்கிறது. மஹா மோஹனுடைய அபஜயம் எட்டாம் அங்கத்தில் ஸித்திக்கப்போகிறது. அதற்குப் பிறகு தான் 'நியதாவதி' என்கிற பல நிச்சய நம்பிக்கை த்ருடப்படும். அது ஒன்பதாம் அங்கத்திலும், பலாகமம் நிர்வஹண மென்னும் பலபூர்த்தி ஸந்தி ஆகிய இவை பத்தாவது அங்கத்திலும் வர்ணிக்கப் படுகின்றன. இந்த அங்கத்தின் முதலில் 'ஸம்ஸ்காரன்' என்கிற பாத்ரம் ப்ரவேசிக்கிறான்.

ஸம்ஸ்காரன் :—ஒரு வஸ்துவின் நேர் அநுபவத்தால் ஏற்படும் அதன் வாஸனை என்னும் ஸம்ஸ்காரப் பெயர் பெற்ற விவேக மஹா ராஜருடைய சில்பி நான்; எல்லா வித்யைகளிலும் சிக்ஷை பெற்றவன்; பரிசயம் அப்யாஸம் இவற்றால் ஸம்ஸ்காரம் உண்டாவது எல்லா வித்யைகளுக்கும் கலைகளுக்கும் பொது. நான் தேவசில்பியான விச்வ கர்மாவையும் அஸுர சில்பியான மயனையும் ஜயித்தவன். மனஸ் கல்பனை செய்வதுபோல் சில்பிகள் கல்பனை செய்வது அரிதே. பஹுகாலம் நான் தூக்கத்தி லிருந்தேன். ப்ரஹ்மா தூங்கிக்கொண்டிருக்கும் பொழுது ஞான விளக்கான வேதத்தைத் திருடிக்கொண்டுபோன மதுகைடபர் என்னும் அஸுரர்களைப்போல, நான் தூங்கிக்கொண்டிருக்கும் போது ரஜஸ் தமஸ் என்னும் இரண்டு ஸத்வகுண சத்ருக்களும், நான் ஸத்வத்தின் மித்ர னென்ற காரணத்தால், என்னைக் கொன்றுவிட முயன்றார்கள். பகவத் க்ருபையால் ஸுமதிதேவியின் தோழியரான ஸஹத்ருஷ்டி ஸத்ருச த்ருஷ்டி என்ற பெயர் கொண்ட இருவர் வந்து என்னை எழுப்பினார்கள். உபய

விபூதி முழுவதும் முக்காலமும் அடங்கிய விச்வத்தின் சித்ரத்தை எழுதிப் பார்க்கவேண்டுமென்று மஹாராஜர் ஆசை கொண்டிருப்பதால், அதை எழுத வேண்டுமென்று அவர் ஸேநாபதியான வ்யவஸாயர் என்னை ஆஜ்ஞாபித்திருக்கிறார். அப்படியே நானும் அதை நிறைவேற்றியிருக்கிறேன். ஸ்வாமி கட்டளையை நன்கு நிறைவேற்றினால்தானே தொழிலாளிகளின் உத்யோகம் ஸ்திரமா யிருக்கும்.

"விதா¬க்ஷஸ்த்வங்கநாம் ஶக்த்யா அத்ருஷ்டித்தீம் விதந்வதா ।
ஸா¬கா ஸா¬கவிஹாராஹம் விஶ்வம் விஶ்விதம் மயா ॥"

(தத்வமுக்தா கலாபம் புத்தி ஸரம் 124-ம் ச்லோகத்தில் கூறியுள்ளபடி) முன் அநுபவித்த விஷயத்தின் ஸ்ம்ருதி (நினைவு) மூன்று வகைப்படும். அவை: ஸஹத்ருஷ்டி ஸத்ருஶ த்ருஷ்டி அத்ருஷ்டம் என்பன. இம் மூன்று காரணங்களால் முன் அநுபவித்த பொருளின் ஸ்மரணம் வரும். (1) ஸஹத்ருஷ்டி யாவது: இரண்டு பொருள்களைக் கூடப் பார்த்திருந்தால், அதில் ஒன்றைத் திரும்பவும் பார்க்கையில், முன் கூடப்பார்த்த ஸம்பந்தத்தால், முன் பார்த்ததும் இப்பொழுது பார்க்காததுமான மற்றொரு ஸம்பந்திப் பொருளும் ஞாபகத்திற்கு வரும். இது ஸஹத்ருஷ்டத்தால் (முன்பு சேர்ந்து பார்த்ததால்) வரும் நினைவு. (2) ஸத்ருஶ த்ருஷ்டியாவது: முன் பார்த்த வஸ்துவைப் போன்ற மற்றொரு ஸத்ருஶப் பொருளைப் பார்க்கையில் 'முன் பார்த்ததைப் போன்றது இது' என்று அதன் நினைப்பு வரும். இது ஸத்ருஶ த்ருஷ்டி எனப்படும். (3) அத்ருஷ்டமாவது: இந்த ஜந்மத்தில் அநுபவிக்காததும் ஜந்மாந்தரத்தில் பார்த்ததுமான சில விஷயங்கள், பகவானுடைய ஸங்கல்ப மென்னும் அத்ருஷ்டத்தால் இப்பொழுது நம்மை அறியாமலே அகஸ்மாத்தாக நினைவிற்கு வரும். இது அத்ருஷ்டமாகும் ஸ்வப்நத்தில் இப்படிப்பட்ட அநுபவங்கள் மிகுதி. விழிப்பு தஶையிலும் ப்ராசீந கர்ம மென்னும் அத்ருஷ்டத்தால் ஜந்மாந்தராநுபூதங்களும் தெளிவில்லாமல் ஸ்வல்பம் நினைப்புக்கு வரலாம். காளிதாஸர் ஶாகுந்தலத்தில் ஐந்தாவது அங்கத்தில்,

"தச்சேதஸா ஸ்மரதி நூநமபோதபூர்வம்
பாவஸ்திராணி ஜநநாந்தர ஸௌஹ்ருதாநி ।"

என்று பாடினார். இங்கே ஸ்வாமி, ஸஹத்ருஷ்டி ஸத்ருஶ த்ருஷ்டி என்ற ஸ்ம்ருதி காரணங்களை ஸுமதி தேவியின் தோழிகளாகக் கூறுகிறார். ஸர்வார்த்த ஸித்தியில் இதன் கருத்து தெளிவாகிறது. ஒரு பொருளை நேரில் அநுபவிக்கையில், அதன் உருவம் மனமென்னும் சுவரில் சித்ரம்போல் பதிகிறது. அதை ஸம்ஸ்காரம்—வாஸனை யென்பர். வேறொரு ஸம்பந்தப் பொருளையோ அல்லது அது போன்ற (ஸத்ருஶப்) பொருளையோ பார்க்கையில், அது, அந்த ஸம்ஸ்காரம் என்கிற நினைவை உண்டாக்குகிறது. ஸ்ம்ருதி என்பது மதியின் பரிணமம்) ஸம்ஸ்காரம் ஒரு காரண விஶேஷத்தால் எழுப்பப்படுகையில், நினைவென்னும் மதிப் பரிணமம் ஏற்படுகிறது. ஸமஸ்கார மென்கிற நான், புருஷனுடைய

புத்தியையே சுவராக வைத்துக்கொண்டு உபய விபூதியும் சேர்ந்த விச்வம் முழுவதும் [சுத்தம்: த்ரிபாத்விபூதி முக்குணத்தில் சேர்ந்த குணஸத்வத்திலும் விலக்ஷணமான சுத்த ஸத்வம்; அசுத்தம்: ரஜஸ் தமோ மிச்ரமான அசுத்த ஸம்ஸார விபூதி என்ற பிரிவை யுடையதாக] என்னுல் எழுதப்பட்டிருக்கிறது.

[சித்ரத்தை நான்கு புறங்களிலும் நன்ருக உற்றுப் பார்த்து] ஹா ஹா! ஒரு ஶில்பி எழுதும் ஆயிரம் சித்ரங்களில் எப்பொழுதோ ஒன்றுென்றுதான் பாக்ய வஶத்தால் நன்ருக அமையும்.

"ஶ்ரேஷ்டம் ஸ்தாநம் ஸாது த்ருடா விதேயா:
ஸூக்ஷ்மா ரேகா ஸம்ஸ்தித: ஸூத்ரவாத: ।
ஸ்நிக்த்ரோவர்ண: ஸ்பஷ்ட உத்ரேகா விஶேஷ:
ஶைக்ஷம் வக்த்ரம் ஶில்பவித்யாமஹேஜ்ஞ: ॥"

சித்ரத்துக்கு ஆதாரமான இடம் அழகியது. அதன் பேரில் பூச்சு அழகாய் ஒட்டியிருக்கிறது. முதலில் போட்ட கோடுகள் மிக ஸூக்ஷ்மமாய்க் கண்ணுக்குத் தெரியாம லிருக்கின்றன. நூல் போட்டபடியே சித்ரம் அமைந்திருக்கிறது. வர்ணப் பசை பளபள வென்று ப்ரகாஶிக்கிறது. ஒவ்வொரு விஶேஷமும் எப்படி யிருக்கவேண்டுமோ அப்படியே இருக்கிறது. நம்முடைய ஶில்ப வித்யையின் பலம் நன்ருய் ஸித்தித்திருக்கிற தென்று நினைக்கிறேன். [நாடகத்தில் இல்லாத கலைகள் இல்லை யென்பர். நாடக கவநத்தில் ஸர்வ தந்த்ர ஸ்வதந்த்ரத்வத்தின் ப்ரகாஶம் ஸித்திக்கும்.]

பிறவியாலேயே ஶில்ப கலா ஶக்தி அமைந்தவர்க்கும் ஶிக்ஷை என்னும் அப்யாஸம் ஏற்றம் தரும். நான் எழுதிய சித்ரங்கள் பகவதவதாரங்களின் உருவம். எழுதப்பட்ட பகவானுடைய க்ருபை என்னும் அத்ருஷ்ட ஶக்தியால் தான் இந்தச் சித்ரங்கள் அத்புதமாக அமைந்துள்ளன. என் ஸ்வாமியும் தேவியும் இச்சித்ரங்களை ஸேவித்து மகிழ்வார்கள். (வ்யவஸாயருடன்) அவர்கள் இதோ வருகிருர்கள். [வ்யவஸாயர் எனும் ஸேநாபதி இரண்டாம் அங்கத்தில் காஶியில் பரமதப் போரில் கூட இருந்தார்; இப்பொழுது காமாதிகளான உள் ஶத்ருக்களை அடக்கும் விஷயத்திலும் மநோஜய விஷயத்திலும் கூட ஸஹகரிக்கிருர்.] [தொடரும்]

ஸ்ரீ:

ஸ்ரீமதே லக்ஷ்மீந்ருஸிம்ஹ பரப்ரஹ்மணே நம:

ஸ்ரீமதே ஸ்ரீஶடகோப ராமாநுஜ யதீந்த்ர மஹாதேசிகாய நம:

# துளஸீ மாஹாத்ம்யம்

[ஸ்ரீ. உப. K. ஸுதர்சநாசார்யர், தமிழ்ப் பண்டிதர், சைதாப்பேட்டை.]

[ஸம்புடம் 6, ஸஞ்சிகை 6-ன் தொடர்ச்சி,]

ஒரு ஸமயம் சோழ ராஜன் அநந்தசயநம் சென்று, ஸ்ரீ அநந்த பத்மநாபனை ஸேவித்து, அவன் திருவடிகளில் ஸ்வர்ண புஷ்பங்களால் அர்ச்சனை செய்து விட்டு ஒரு புறம் நின்றுகொண் டிருந்தான். அங்கு, திருமால் அடியார் ஒருவர் துளஸீ க்ரஹணம் பண்ணிக்கொண்டு தீர்த்தக் குடத்துடன் ஸந்நிதிக்கு வந்து, மிகுந்த பக்தியுடன் அத்தீர்த்தத்தால் எம்பெருமானது திருவடிகளை விளக்கித் துளஸியால் அர்ச்சனை செய்துகொண் டிருந்தார். . இதைக் கண்ட அரசன், திருத்துழாயின் மஹத்வத்தை அறியாமல், "அடே! பக்தியில்லாத மூடா! நான் அர்ச்சித்த ஸ்வர்ண புஷ்பங்களைக் காட்டுத் தழைகளால் மறைத்து, பகவானுடைய திருவடியின் சோபையைக் கெடுக்கிறாயே!" என்று அதட்டினான். அதற்கு அவ்வடியார் அவனை அரச னென்று மதியாமல் "அரசே! ஏன் வீண் கர்வம் உனக்கு? பக்தி ஸ்வரூபத்தை முற்றும் அறிந்துவிட்டாற் போலன்றோ பேசுகிறாய்! எத்தனை வ்ரதங்கள் இதுவரையில் நீ பகவானைக் குறித்து அநுஷ்டித்திருக்கிறாய்? பக்தியின் ஸ்வரூபமே அறியாதவன் நீ" என்றார். அரசனுக்குச் சினம் மூண்டது. "அடே பிச்சைக்காரப் பதரே! நீதான் பக்தியைத் தெரிந்துகொண்டவன்போல் கர்வ மடைந்திருக்கிறாய். நீ எத்தனை வ்ரதங்கள் ஆசரித்திருக்கிறாய்? உனக்கோ கையில் காசில்லை. கோவில் குளங்கள் பல நிர்மாணம் செய்திருக்கிறாயோ? ப்ராஹ்மணர்களே! இந்தப் பிச்சைக்காரனுக்கு இருக்கும் கர்வத்தைப் பாருங்கள். பகவானை யார் காண்கிறார் பார்ப்போம்; பிறகு எங்கள் இருவரின் பக்தி அப்போது தான் விளங்கும்" என்று சொல்லிவிட்டு அரசன் தனது இருப்பிடம் சென்று, பகவானைக் காணும் பொருட்டுப் பெரிய யாகம் ஒன்றைத் தாந தர்மாதி விமர்சையுடன் ஆரம்பித்து நடத்தலானான். திருமால் அடியாரும் அதே ஊரில் ஓரிடத்தில் இருந்துகொண்டு, துளஸீ தளங்களை எடுத்து அத்யாதரத்துடன் பகவதர்ச்சநம் செய்துகொண்டு பகவானை அநுஸ்யூதமாய் ஆராதித்துக்கொண்டு வந்தார். ஒரு நாள் அவர் பாகம் செய்துவிட்டுத் திருவாராதநம் செய்துகொண்டிருக்கையில், அவ்வந்நத்தை யாரோ ஒருவன் திருடிச் சென்று விட்டான். அன்று பகவந் நிவேதநத்துக்கு விக்நம் நேர்ந்தது; எனினும், அர்ச்சனைக்கு உபரோதம் வரக்கூடாதென்று எண்ணி மறுபடி பாகம் செய்யாம லிருந்துவிட்டார். இப்படியே உபவாஸத்துடன் ஏழு நாள் கழிந்தது. எட்டாம் நாள் இந்தத் திருட்டைக் கண்டு பிடிக்க வேண்டுமென் றெண்ணிப் பாகம் செய்து விட்டுப் பக்கத்தில் ஓரிடத்தில் மறைந்துகொண்டிருந்தார். வழக்கப்போல் அந்நத்தை அபஹரிக்குமவன் வந்து அதை எடுத்துச் செல்வதை அடியார் கண்டார். அப்போது, உடல்

மெலிந்து தசைவற்றி நரம்பும் எலும்புமாய்த் தைந்யத்துடன் கூடின சண்டாளன் ஒருவன் காணப்பட்டான். பார்த்தார் பக்தர். அவன் நிலைமை இவருக்குப் பரிதாபத்தை உண்டாக்கியது. உடனே, "ஓய்! நில்லும், நில்லும். நெய், உபதம்சம் முதலியன இல்லாமல் இதை எப்படிப் புசிப்பீர்? இதோ அவைகளைக் கொண்டு வருகிறேன்" என்று சொன்னார் அந்தப் பக்தர். அதைக் கேட்டு அந்தப் புருஷன் பயத்தால் ஓட ஆரம்பித்தான்; நடக்கமுடியாமல் தடுக்கிக் கீழே விழுந்து மூர்ச்சித்துவிட்டான். பக்தன் ஓடிப்போய் 'ஐயோ! வழக்கம் போல் அபஹரித்துப் போகட்டும் என்றிராமல் ஏன் இக்கார்யம் செய்தேன்?" என்று தபித்துக்கொண்டு அவனுக்கு விசிறி முதலியன கொண்டு சைத்யோபசாரம் பண்ணிக்கொண் டிருக்கையில், திடீரென்று அப்புருஷன் மறைந்தான். உடனே, சங்கம் சக்ரம் முதலிய பஞ்சாயுதங்களுடனே பீதாம்பர தாரியாய்ப் பகவான் ஸேவை ஸாதித்ததைக் கண்டு தாஸன் திடுக்கிட்டு ஒன்றும் தோன்றாதவனாய் நிற்கையில், பகவான், "அன்ப! உனது பாவ சுத்தியும் பாஹ்ய சுத்தியும் கூடின துளஸியின் அர்ச்சனையால் மகிழ்வுற்றேன். உன்னுடைய நிதான புத்தியையும் க்ஷமையையும் பரீக்ஷிக்க நினைத்து இக்கார்யம் செய்யலானேன். என்ன பொறுமை! எட்டுநாள் உபவாஸம் இருந்தாய். அந்நத்தைச் சண்டாளன் அபஹரிக்கக் கண்டும் மனம் பதறாமல் அவன் உடல் நிலையை உன்னிப் பரிதபித்தாய். என்ன ஆச்சர்யம்! இந்தச் சாந்தியும் துளஸியின் அர்ச்சநத்தாலேயே உனக்கு உண்டானது" என்று பலபடி புகழ்ந்து, விமாநத்தில் ஏற்றி வைத்துக் கொண்டு, அரசன் யாகபூமிக்கு நேராக அவன் கண்ணுக் கிலக்காம்படி ஆகாய மார்க்கமாய்த் தன் பக்தனை அழைத்துக்கொண்டு எழுந்தருளினார். இதைக் கண்ட ராஜன் மனம் சோர்ந்து முத்கலர் என்னும் தன் ஆசார்யனை நோக்கி, "ஸ்வாமீ! யாக தாநாதிகள் யாவும் விஷ்ணு தாஸனுடைய துளஸீ அர்ச்சனைக்கு ஈடாகா" என்று சொல்லிவிட்டு, தனக்குப் புத்ர னில்லாமையால் ராஜ்யத்தைத் தன் மருமகனுக்குப் பட்டங் கட்டி விட்டு, அக்நி குண்டம் ஒன்று நிர்மாணம் செய்து, மிகுந்த நிர்வேதத்துடன் தனக்குப் பக்தியை அருளும்படி பகவானை ப்ரார்த்தித்துக்கொண்டே அதில் விழுந்து இறந்தான். பகவானும் அவனது நிர்வேதத்துக் கிரங்கிப் பூலோகத்தில் அவனைப் பக்தனாய்ப் பிறப்பித்துக் கடைசியில் தனது பதத்தை அளித்தருளினார்.

ஆதலால் இத்தகைய மஹா ப்ரபாவமுள்ள துளஸியை ச்ரத்தையுடன் வைத்துப் பயிராக்கி, அதைக் கொண்டு பகவானை அர்ச்சனை செய்து வந்தால் பகவத் ஸாக்ஷாத்காரம் உண்டாகி, நாம் ஸுலபமாய் ஸம்ஸாரத்திலிருந்து விடுபட்டு முக்தியடைவோம் என்பது நிச்சயம்

" வாராயின் முலையா ளிவள் வானோர்தலை மகனும்
சீராயின தெய்வநன்னோயிது தெய்வத் தண்ணந் துழாய்த்
தாராயினுந் தழையாயினும் தண் கொம்ப தாயினும் கீழ்
வேராயினும் நின்ற மண்ணாயினும் கொண்டு வீசுமினே.

[திருவிருத்தம்: 53]

ஸ்ரீ:

ஸ்ரீமதே லக்ஷ்மீந்ருஸிம்ஹ பரப்ரஹ்மணே நம:

# குரவர் குறள்

[பந்தல்குடி பாரத்வாஜ மாடபூசி ரே. திருமலை ஐயங்கார், தமிழ் வித்வான்,
கார்யதர்சி, திருவல்லிக்கேணித் தமிழ்ச் சங்கம்.]

[சென்ற ஸஞ்சிகையின் தொடர்ச்சி.]

தத்வத்ரய ஜ்ஞானம் உடையார்க்கே மோக்ஷோபாயம் கை கூடும். 'தத்வபதவீ' என்றதோர் ரஹஸ்யத்தில் ஸ்ரீமந் நிகமாந்த மஹாதேசிகன் பின் வருமாறு அருளிச் செய்துள்ளார். 'ஸதாசார்ய ப்ரஸாதத்தாலே பராவர தத்வ ஜ்ஞானம் பிறந்து ஸர்வேச்வரன் திருவடிகளை உபாயோபேயங்களாகப் பற்றி உஜ்ஜீவிக்கவேண்டும். பரதத்வமாவது—ஸ்வ வ்யதிரிக்த வஸ்துக்க ளெல்லாத்துக்கும் தாரகனுமாய், நியந்தாவுமாய், சேஷியுமான ச்ரிய:பதி. இவன் ஸ்வதஸ் ஸர்வஜ்ஞனாய், ஸர்வ சக்தியாய், பரம காருணிகனாய், ஸர்வ சரண்யனாய், பரமோதாரனாய், மோக்ஷப்ரதனாய், முக்த ப்ராப்யனாய், பர வ்யூஹாதி பஞ்ச ப்ரகார சுபாச்ரய திவ்யமங்கள விக்ரஹ விசிஷ்டனாயிருக்கும். இவனை யொழிந்தவை அவர தத்வம். இது சேதநம் என்றும் அசேதநம் என்றும் இரண்டு வகையா யிருக்கும். சேதநமான அவர தத்வம் பரிச்சிந்நமான அஹமர்த்தம். இதற்கு ஜ்ஞாத்ருத்வ கர்த்ருத்வ போக்த்ருத்வங்கள் பராயத்தங்களா யிருக்கும். இது பத்த முக்த நித்ய ரூபத்தாலே த்ரிவிதம். பத்தராவார் ஸம்ஸரிக்கு மவர்கள். முக்தராவார் ஸம்ஸாரம் கழிந்தவர்கள். நித்யராவார் ஒரு காலத்திலும் ஸம்ஸார மில்லாத நித்ய ஸூரிகள். அசேதநமாவது அறிவில்லாத வஸ்து. அசேதந த்ரவ்யம் த்ரிகுணம் என்றும், காலம் என்றும், சுத்த ஸத்வம் என்றும், தர்மபூத ஜ்ஞானம் என்றும் சதுர்விதமா யிருக்கும். த்ரிகுணமாவது, ஸத்வாதி குணத்ரயாச்ரயமான த்ரவ்யம். இது ப்ரக்ருதி விக்ருதி விபாகத்தாலே இருபத்துநாலு வகையாய் பகவல்லீலார்த்தமாக க்ஷேத்ரஜ்ஞருக்குக் காய கரணாதி ரூபேண பரிணமித்துப் பகவத் ஸ்வரூப திரோதாநாதிகளைப் பண்ணும். காலமாவது—க்ஷணாதி விபாகத்தை உடைத்தாய், ஸர்வ கர்த்தாவான ஈச்வரனாலே ஸஹகாரியாக ஸ்வீக்ருதமா யிருக்கும். சுத்த ஸத்வமாவது—ரஜஸ் தமஸ் ஸுக்க ளன்றிக்கே ஸத்வகுணாச்ரயமான த்ரவ்யம். இது ஈச்வரனுக்கும் நித்யருக்கும் முக்தருக்கும் விக்ரஹாதிரூபேண விசித்ர போக்யமாயிருக்கும். தர்மபூத ஜ்ஞானமாவது—பராவராத்மாக்களுக்கு ஸ்வாத்மாவையும் ஸ்வ வ்யதிரிக்த வஸ்துக்களையும் ப்ரகாசிப்பிக்கவற்றான ஜ்ஞானம். இந்த ஜ்ஞானத்தாலே ஆத்மாக்களுக்கு ஜ்ஞாத்ருத்வ கர்த்ருத்வ போக்த்ருத்வங்கள் உண்டாகின்றன. பத்தருக்கு நிஷித்த காம்ய கர்த்ருத்வம் ஸம்ஸாரஹேது. தத்வஜ்ஞான மூல நிவ்ருத்தி தர்ம கர்த்ருத்வம் மோக்ஷஹேது. பத்தன் முன்பு பண்ணின பந்தங்களுக்கெல்லாம் தன் அதிகாராநுரூபேண குணமாக ப்ரபத்யாதி ப்ராயச்சித்தம்

பண்ணி மேல் அபராதம் பண்ணுதே ப்ராரப்த கர்மத்தையும் ஒரு வழியாலே கழித்து முக்தனும்."

மூன்று தத்வங்களைப் பற்றி மறை முடித் தேசிகனர் தாமியற்றியுள்ள தேசிகமாலையில் பலபடியாகக் கூறியுள்ளார். அவற்றுட் சில வருமாறு :—

" திருநா ரணனெனுந் தெய்வமும் சித்தும் அசித்து மென்று
பெருநான் மறைமுடி பேசிய தத்துவம் மூன்று."

(அமிருதரஞ்சனி 10)

" காரணமா யுயிராகி யனைத்துங் காக்கும்
கருணைமுகில் கமலையுட னிலங்குமாறும்
நாரணனர் வடிவான உயிர்க ளெல்லாம்
நாமென்று நல்லடிமைக் கேற்குமாறும்
தாரணிநீர் முதலான மாயை காலம்
தனிவானென் றிவை யுருவாந் தன்மைதானும்" (ஷை 17)

" நாராயணன் பரன்நாம் அவனுக்கு நிலையடியோம்
சோரா தனைத்து மவனுடம் பென்னும் சுருதிகள் " (ஷை 17)

" முக்குண மாயையின் முவெட்டின் கீழ்வரு மூவகையும்
இக்குண மின்றி யிலங்கிய காலச் சுழியினமும்
நற்குண மொன்றுடை நாகமும் நாராயண னுடம்பாய்ச்
சிற்குண மற்றவை " (ஷை 24)

" ........சித்து மசித்து மிறையுமென
வேறுபடும் வியன் தத்துவம் மூன்றும் "

(அதிகார சங்கிரகம் 12)

" சித்து மசித்து மிறையுமெனத் தெளிவுற்று நின்ற
தத்துவம் மூன்றும் தனித்தனி காட்டும் தனிமறை '

(பரமத பங்கம் 4)

மோக்ஷத்திற்கு நேர் காரணம் எம்பெருமானது அருள். அதைப் பெறுவதற்கு முதலில் தத்வம் மூன்றையும் நன்கு அறிந்து அதன் மூலம் உபாயத்தை அநுஷ்டிக்கவேண்டும். இந்தப் பேருண்மையை அநேக ரஹஸ்யங்களில் மணிப்பவள நடையில் நன்கு விளக்கிப் போந்த வித்தகன் வேதாந்த தேசிகன், தமிழ் மக்கள் அதனை அறிந்து உய்தற்காக ஒரு சிறு குறள் வெண்பாவில் அமைத்து நல்கியுள்ளார். அதுவே 'குரவர் குறள்' ஆகும். அதனை ஈண்டு தருகின்றனம்.

" முத்திக் கருள்சூட மூன்றைத் தெளிமுன்ன
மித்திக்கா லேற்கு மிதம் " (அமிருதரஞ்சனி 3)

இது மேலே காட்டியுள்ள தத்வபதவியிலுள்ள தீங்குறள். " மோக்ஷத்திற்குக் காரணமான பகவத் க்ருபையைப் பெறுவதற்குச் சேதநம் அசேதநம் ஈசுவரன்

என்னும் மூன்று தத்துவங்களை முதலில் தெளிந்து கொள்; இந்த வழியால் உபாயம் பொருந்தும்" என்பது இதன் உரை. இக்குறளில் உள்ள ஒவ்வொரு பதமும் மிக ஆராய்ந்து பொறுக்கிச் சேர்க்கப்பெற்றிருக்கின்றது. இக்குறளின் வியாக்கியானமாகவே உள்ளது தேசிகமாலை யெனின், அது உற்ற துரைத்தலையாம். இதமாவது : மோக்ஷத்திற்கு ஸாதநமாக அநுஷ்டிக்கப்படும் உபாயம். எனவே மோக்ஷத்திற்கு உபாயமான பக்தியும் ப்ரபத்தியும் இதம் என்க.

தேசிகன் என்னும் ஆசான் இக்குறள் மூலம் இட்ட கட்டளையை அவன் அடியார்கள் நன்கு நிறைவேற்றக் கடவர். ஆசாரியன் ஆணை காத்தலே அடியார்க்கு அழகு.

ஸ்ரீ:

## பஞ்சாங்க ஸங்க்ரஹம்.

### ஸர்வஜித் ஸ்ரீ ஐப்பசி (துலா) மாஸம்.

| | | | | |
|---|---|---|---|---|
| 18—10—47 | 1உ | சனிக்கிழமை | ... | துலா ஶுக்ல பஞ்சமி திதி |
| 19 ,, | 2உ | ஞாயிற்றுக்கிழமை | ... | அதிதி |
| 20 ,, | 3உ | திங்கட்கிழமை | ... | ஷஷ்டி – ஸ்ரீ மணவாள மஹாமுநிகள் திருநக்ஷத்ரம். |
| 23 ,, | 6உ | வியாழக்கிழமை | ... | மஹாநவமி: ஸ்ரீ பொய்கையாழ்வார் திருநக்ஷத்ரம். |
| 24 ,, | 7உ | வெள்ளிக்கிழமை | ... | விஜயதஶமி: ஸ்ரீ பூதத்தாழ்வார் திருநக்ஷத்ரம். |
| 25 ,, | 8உ | சனிக்கிழமை | ... | ஸ்ரீ பேயாழ்வார் திருநக்ஷத்ரம் |
| 4—11—47 | 18உ | செவ்வாய்க்கிழமை | ... | துலா க்ருஷ்ண ஷஷ்டி திதி |
| 5 ,, | 19உ | புதன்கிழமை | ... | ஸப்தமி அஷ்டமி திதி த்வயம் |
| 8 ,, | 22உ | சனிக்கிழமை | ... | துலா க்ருஷ்ண ஏகாதஶி திதி |
| 9 ,, | 23உ | ஞாயிற்றுக்கிழமை | ... | ஸ்ரீ வைஷ்ணவ ஏகாதசி வ்ரதம் |
| 11 ,, | 25உ | செவ்வாய்க்கிழமை | ... | தீபாவளிப் பண்டிகை |
| 12 ,, | 26உ | புதன்கிழமை | ... | அமாவாஸ்யை |
| 15 ,, | 29உ | சனிக்கிழமை | ... | துலா சுக்ல த்ருதீயை திதி |

[குறிப்பு:—இந்த மாஸத்தில் ஶுக்ல சதுர்த்தி திதி ஸம்பவிக்கவில்லை. அப்படி ஸௌர மாஸத்தில் ஒரு திதி லபியாவிட்டால், அன்று செய்யவேண்டிய ச்ராத்தத்தை சாந்த்ரமாந ரீதியாகப் பூர்வ மாஸத்தில் செய்யவேண்டும். அந்தச் சாந்த்ர மாஸம் க்ஷயம் அடைந்திருந்தால் உத்தர மாஸத்து திதியே க்ராஹ்யம். இப்போது சாந்த்ர மாஸம் க்ஷயம் அடைந் திருப்பதால், ஐப்பசி மாஸத்து ஶுக்ல சதுர்த்தி ச்ராத்தத்தை கார்த்திகை மாஸம் 1உ ஶுக்ல சதுர்த்தியில் செய்யவேண்டும் வ்ருச்சிக ஶுக்ல சதுர்த்தி திதி ச்ராத்தமும் அந்தக் கார்த்திகை மாஸம் 1உ யிலேயே செய்யப்பட வேண்டும்.]

ஸ்ரீயை நம:

# தேவாலயங்கள்

[ஸ்ரீ. உப. V. பாஷ்யமையங்கார், மாஜி ஹைகோர்ட் ஜட்ஜ், 'வர்த்திநி' சேத்துப்பட்டு.]

இப்பத்ரிகையின் கடந்த ஸஞ்சிகையில் வெளிவந்த ஸ்ரீ வங்கீபுரம் துரைஸாமி ஐயங்காரின் 'ஆலய ப்ரவேசமும் நமது கடமையும்' என்னும் லிகிதத்தைப் பொறுத்தும், "பகவத் விக்ரஹங்களின் ஆராத்யத்வம்" என்னும் தலைப்பில் ஸ்ரீ ஸம்பாதக ஸ்வாமி அநுக்ரஹித்த குறிப்பைப் பொறுத்தும், அடியேன் ஒரு சிறிய விஜ்ஞாபநம் பண்ண விரும்புகிறேன்.

'ஹரிஜநங்கள் புகுந்து தொழுத தேவாலயங்களில் ஆஸ்திகர்கள் தொழக் கூடுமா?' வென்பது விசார்யம். இதில் இரண்டு முக்ய ப்ரச்னைகள் அடங்கியுள்ளன. முதலாவது: ஹரிஜநங்களின் ஜாதியைப் பற்றியது. இரண்டாவது: 'அவர்களுடைய ப்ரவேஶத்தால் கோவில்களில் வீற்றிருக்கும் அர்ச்சைகள் தைவ ஸாந்நித்யத்தை இழந்து விட்டனவா?' வென்பது.

முதல ப்ரச்னையைக் கவனிப்போம். ஸ்ரீ ஸம்பாதகரின் குறிப்பில் ஹரிஜனங்களென்று வ்யவஹரிக்கப்படுகிறவர்களைப் பஞ்சம ஜாதியரென்று சொல்லப்பட்டிருக்கிறது. ஆனால் பஞ்சம சப்தம் அநிஷ்டபங்கம். பஞ்சம ஜாதி யென்றொரு ஜாதியை ஶாஸ்த்ரங்கள் அங்கீகரித்திருப்பனவாய்த் தெரியவில்லை. மாறாக, 'நாஸ்திது பஞ்சம:' என்று மநுவின் சாஸநம்.

ஹரிஜநங்களென்று வ்யஹரிக்கப்படுகிறவர்கள் அநேக வெவ்வேறு ஸமூஹங்களா யிருப்பதை நாம் அறிவோம். இந்த ஸமூஹங்களுக்குள் அந்யோந்ய விவாஹம் கிடையாது. ஸஹபோஜநமு மில்லை. மற்ற வேறுபாடுகளு முண்டு. இந்த ஸமூஹங்களெல்லாம் ஒரே ஜாதியா? அல்லது வெவ்வேறு ஜாதிகளா? இதை ஒருவரும் ஆராயப் புகுவதில்லை.

ஹரிஜநங்களென்றும் பஞ்சமர்களென்றும் இன்னும் இதர பெயர்களாலும் வ்யவஹரிக்கப்படும் அநேக வகுப்புக்களடங்கிய கோடிக் கணக்கான ஜநங்களனை வரையும் சிலர் சாஸ்த்ரோக்த சண்டாள ஜாதீயரென்று ஸாதிக்கப் பார்க்கிறார்கள். இதற்குப் போதுமான ஆதாரமில்லை யென்பது அடியேனுடைய துணிபு. இதை, இப்பத்ரிகைக்கு முன் நடத்தப்பட்டு வந்த வேதாந்த தீபிகையின் பவ வர்ஷத்திய புரட்டாசி மாஸ ஸஞ்சிகையில் கொஞ்சம் விரிவாய் விமர்சித்திருக்கிறேன்.

ஜாதியைப் பற்றின ப்ரச்னை அடிக்கடி ந்யாய ஸ்தலங்களில் எழுகிறது. ந்யாயாதிபதிகள் அதைச் சட்டத்தையும் ந்யாயத்தையும் கொண்டு தீர்மாநிக்கிறார்கள். அநிஷ்டபங்கமாய்ப் பஞ்சமனென்று வ்யவஹரிக்கப்படும் ஒரு வ்யக்தியைக் குறித்து அவன் சாஸ்த்ரோக்த சண்டாள ஜாதீயனா வென்னும் ப்ரச்னையைக் கிளம்பினால் அதைப் பக்ஷபாதமற்ற ந்யாயாதிபதிகள் அங்கிகரியார்களென்பது அடியேனுடைய நம்பிக்கை.

ஹரிஜநங்கள் சாஸ்த்ரோக்த சண்டாள ஜாதீயர்களல்லாவிடில் அவர்களுடைய ப்ரவேசத்தால் கோவில்களில் வீற்றிருக்கும் அர்ச்சா மூர்த்திகள் தங்களுடைய தைவ ஸாந்நியத்யத்தை இழந்துவிட்டனவாகக் கருதக் காரணம் இல்லை.

மேலும்: மேற்கண்ட ஜனங்கள் இதுவரையிலேயே எல்லாப் பெரிய கோவில்களிலும் கூட்ட காலங்களில் உட்புகுந்து கலந்து வந்திருக்கும் பஹிரங்க ரஹஸ்யத்தை யார் அறியார்? அதனால் கெடாதது இனிக் கெட இருக்கிறதோ?

மற்றொன்றும் கவனிக்கத்தக்கது. ஆகம சாஸ்த்ரங்களின் ஆதாரத்தைக் கொண்டல்லவா தைவ ஸாந்நித்யம் போய்விட்டதாய்க் கருதுவது? அவ்வாகம சாஸ்த்ரங்களில் சொல்லப்பட்ட விதிகள் முழுவதுமாவது முக்யமாம்சங்களாவது எந்தக் கோவிலிலாவது தகுத்த அதிகாரிகளால் சரிவர அநுஷ்டிக்கப்பட்டு வந்திருக்கின்றனவா? ஆத்ம விதிகளை நிர்த்தாக்ஷிண்யமாய்க் கவனித்தால், கோவில்களில் நடந்து வந்திருக்கும் விதி விபர்யாஸ ந்யூநாதிரிக்தங்கள், அவைகளில் பூஜிக்கப்பட்டு வந்திருக்கும் அர்ச்சைகளின் தைவ ஸாந்நித்யத்தை வெகு காலத்திற்கு முன்னமேயே வெகு தூரம் ஓட்டியிருக்கவேண்டும். இப்படி நாம் கொள்ளலாமா? தகுதியா?

வாஸ்தவத்தில் ஆகம சாஸ்த்ரங்களை ப்ரவர்த்தித்தவன் இத்தகைய குற்றங்களை க்ஷமித்தருளக் கூடிய நிர்ஹேதுக க்ருபாவானல்லவா? ஆகம விதிகளை யதாப்ரகாரம் அநுஷ்டிக்கவும் அநுஷ்டிப்பிக்கவும் ப்ரக்ருதி வச்யரான நாம் அசக்தர்க ளென்று அவன் அறியானா? தோல் கன்றுக் கிரங்கும் பசுவிலும் தண்ணியனா அவன்? ஆபிமுக்யமே போதாதா அவன் எந்தப் பாபிஷ்டனையுங் குளிரக் கடாக்ஷிக்க? நம்பினவர்களைக் கேவல விதி விபர்யாஸ ந்யூநாதிரிக்தங்களை முன்னிட்டு அகற்றுவனா? அவர்களுக்குத் தன் ஸாந்நித்யத்தை மறைப்பனா?

இவ்வுண்மையை ஆழ்வார்களும் ஆசாரியர்களும் தெரிவித்திருக்கவில்லையா? 'ப்ரபத்தி பண்ணிற்றும் அர்ச்சாதாவரத்திலே' யென்பது லோகாசார்ய ஸூக்தி. அவ்வர்ச்சைகள் ஆகம விதிப்படி பூஜிக்கப்பட்டு வருகின்றனவா வென்று விசாரித்துத் தெரிந்துகொண்டா அவ்விதம் அவர்கள் ப்ரபத்தி பண்ணினார்கள்? ஸௌலப்யத்திற் கெல்லை நில மென்பதும் ஆச்ரயண ஸௌகர்யாபாதக ஸமஸ்த கல்யாணகுண பரிபூர்த்தியுடைய தென்பது மல்லவா அர்ச்சைகளின் முக்கிய விசேஷமும் ஏற்றமும்?

ஆசார்யர்களும் அர்ச்சைகளை ஸர்வ ஸஹிஷ்ணு வென்றும், ஸார்வஜநீநம் என்றும், பரமபாவந மென்றும் கோஷித்திருக்கிறார்கள். அந்த ஸார்வஜநீநத்வம், அந்தக் குணபூர்த்தி, அந்தப் பாவநத்வம், அந்த ஸௌலப்ய காஷ்டை முதலானவை யெல்லாம் மறையக் கூடியவையாகவாவது, மறைந்து விட்டதாகவாவது கருதக் கூடுமா? நம்முடைய விச்வாஸத்தை இன்னும் பலப்படுத்திக் கொண்டு ஸமஸ்த ப்ராணி ஸந்த்ராண சீலர்களாயும் கருணோல்பணர்களாயும் விளங்கும் அர்ச்சாவதார எம்பெருமான்களை, வஸிஷ்ட சண்டாள விபாக மறக் குளிரக் கடாக்ஷிக்க ப்ரார்த்திப்பது நம்முடைய ஸ்வரூப மல்லவா? இது வர்ணாச்ரம தர்மங்களுக்கு விரோதமா?

ஆக: ஹரிஜநங்க ளென்று வ்யவஹரிக்கப்படுகிற கோடிக்கணக்கான மக்களை ஶாஸ்த்ரோக்த சண்டாள ஜாதீய ரென்று அறுதியிட முடியா தென்பதும், ஆகையால் அவர்களுடைய ப்ரவேசத்தால் தேவஸ்தாநங்கள் தைவ ஸாந்நித்யத்தை இழந்து விட்டனவாகக் கருதலாகா தென்பதும், எப்படியானாலும் ஆழ்வாராசார்யர் முதலான பெரியோர்கள் அநுபவித்து மங்களாசாஸநம் பண்ணின திவ்யமங்கள மூர்த்திகளை ஆஸ்திகாக்ரேஸவர்கள் கைவிடலாகா தென்பதும், தவிர ' இப்பொழுது ஏற்பட்ட பரப்பைப் பகவத் ஸங்கல்பமாகக் கொண்டு தேவஸ்தாநங்களில் ஏற்கெனவே யுள்ள குற்றம் குறைகளைப் போக்கி, அவைகளைச் சீராக்கி, அவைகள் மூலம் ஸகல ஜநங்களின் ஆஸ்திக்யத்தை வ்ருத்திசெய்து லோக ஹிதத்தைப் பெருக்குவது அவர்கள் பர மென்பதும் அடியேனுடைய ஸவிநய விஜ்ஞாபநம். விஜ்ஞாப்யங்கள் இன்னும் வயிற்றுள; விஸ்தர பயத்தால் விரமிக்கிறேன்.

---

ஸ்ரீ:

# செய்திகள்

## ஸ்ரீ ரங்கநாத சடகோப யதீந்த்ர மஹா தேசிகனுடைய வார்ஷிக மஹோத்ஸவம்.

ஸ்ரீ அஹோபில மடம் ஆஸ்தாநத்தில் 28-வது பட்டத்தில் மூர்த்தாபிஷிக்தராய் எழுந்தருளி யிருந்த ஸ்ரீவண் சடகோப ஸ்ரீ ரங்கநாத சடகோப யதீந்த்ர மஹா தேசிகனுடைய வார்ஷிக திருநக்ஷத்ர மஹோத்ஸவம், ஸ்ரீ மதுராந்தகம் ப்ருந்தாவநத்தில் பத்து திநங்கள் வீதி உத்ஸவம் ஸேவை சாத்துமறை வேதபாராயணம் முதலியவைகளுடன் நடைபெற்றது. நடந்த 26—8—47 திருநக்ஷத்ர திநத்தன்று ஸ்ரீ அழகிய சிங்கர் ஸ்ரீமதாதிவண் சடகோப யதீந்த்ர மஹா தேசிகனுடன் வீதி உத்ஸவம் கண்டருளி, மத்தியில் நம் அஹோபில மடம் ஸம்ஸ்க்ருத கலாசாலைக்கு எழுந்தருளி மண்டவப்படி கண்டருளினார். அம்மண்டவப்படி வித்யார்த்திகளால் வெகு விமர்சையாக நடத்திவைக்கப்பட்டது. பிறகு ப்ருந்தாவநத்துக்கு எழுந்தருளி ஸேவை சாத்துமறைகள் விமர்சையாக நடந்தேறின. மறுநாள் விடாயாற்றி உத்ஸவத்துடன் வைபவம் பூர்த்தி யடைந்தது.

நரஸிம்ஹ தாஸன்.

* * * *

## ஸ்ரீ விஷ்ணு ஸஹஸ்ரநாம ஸபா, தேரழுந்தூர்

ஸ்ரீ அழகிய சிங்கர் நியமநப்படி, இந்தியப் புது அரசியல் சகாப்தத்தில் ஆஸ்திக்யமும் ஸம்ப்ரதாய ப்ரவர்த்தநங்களும் சீர்குலையாமல் உபர்யுபரி ஓங்கி வளரும்படி, 14—8—47 நள்ளிரவிலும் மறுநாளும், ஸ்ரீ அஹோபில மடத்திலும் ஸ்ரீ ஆமருவியப்பன் ஸந்நிதியிலும், விசேஷ திருமஞ்ஜநமும் ஸஹஸ்ர நாமார்ச்சனையும் விசேஷ தளிகைகளும் தீபாலங்காரமும் செய்யப்பட்டு, ஸ்வதந்த்ர திநக் கொண்டாட்டம் மிக்க வைபவத்துடன் நடைபெற்றது. 18—8—47-ல், திருவல்லிக்கேணி தமிழ்ச் சங்க கார்யதர்சி பந்தல்குடி பாரத்வாஜ மாடபூசி வித்வான் ஸ்ரீ. உ. வே. திருமலை அய்யங்கார் ஸ்வாமி, ஷை ஸபை ப்ரெஸிடெண்ட் ஸ்ரீ. உ. வே. T. S. ஸுந்தரம் ஐயங்கார் ஸ்வாமி (B.A., L.T.,) தலைமையில், "கம்ப நாட்டாழ்வான்" என்பது பற்றி அரியதோர் உபந்யாஸம் செய்தார். இவ்வுபந்யாஸத்திற்கு, தேவஸ்தாந தர்மகர்த்தா ஸ்ரீமான் C. ஆராவமுதாசார்யர், (B.A.,) தேவஸ்தான மானேஜர் ஸ்ரீமான். M. ஸோமஸுந்தரம் பிள்ளை முதலிய பெரியோர்கள் ப்ரஸந்நமாயிருந்தனர். ஸ்ரீ மானேஜர் அவர்களின் வந்தநோபசாரத்துடன் ஸபை இனிது முடிவுற்றது.

R. நரஸிம்ஹ தாஸன்
(கார்யதர்சி.)

* * * *

## ஸ்ரீ கல்யாணபிவர்த்திநீ ஸபா, மதுராந்தகம்

இந்த ஸபையின் பொதுக் கூட்டம் ஒன்று 27-7-47 ஞாயிற்றுக்கிழமை பகல் 1½-மணிக்குக் கலாசாலை ப்ரார்த்தநா மண்டபத்தில், ஸபாத்யக்ஷர் ஸ்ரீ. உ. வே. தி. ராமஸ்வாமி

ஐயங்கார் (M.A., L.T., ப்ரின்ஸிபால்) ஸ்வாமியின் ஆத்யக்ஷ்யத்தில் கூடிற்று. அப்போது 1947–48 வர்ஷ ஸபா கார்ய நிர்வாஹகர்களைத் தேர்ந்தெடுக்கும்படி வித்யார்த்திகளை அத்யக்ஷர் நியமித்தார். வித்யார்த்திகள் ஏக மனதாக, கார்யதர்சிகளாக P. K. ராமபத்ரன், P. N. க்ருஷ்ணமாசாரி இருவரையும், ஆலோசகர்களாக K. G. ஸந்தான கோபாலன், M. R. ஸ்ரீநிவாஸன், K. S. விஜயராகவன் இவர்களையும் தேர்ந்தெடுத்தனர். அத்யக்ஷ ஸ்வாமியால் ஸபையின் நிர்வாஹத்தைப் பற்றிச் சில விஷயங்கள் உபதேசிக்கப் பட்டன. ஷ ஸபைக்குக் கலாசாலை அத்யக்ஷர்கள் அனைவரும் எழுந்தருளி யிருந்தனர். வந்தனோபசாரத்துடன் ஸபை இனிது முடிந்தது.

*   *   *   *

ஷ ஸபையின் ஆறுவது வர்ஷாரம்ப ஸபையானது 13-8-47 புதன்கிழமை மாலை 4-மணிக்கு ஸ்ரீ அஹோபில மடம் ஸ்ரீ கார்யம் வித்வான் ஸ்ரீ. உப. ஜோ. ரங்காசார்ய ஸ்வாமியின் தலைமையில் கூடிற்று. அப்போது கலாசாலை அத்யாபக ஸ்வாமிகள் அனைவரும் எழுந்தருளியிருந்தனர். மங்களாசரணத்திற்குப் பிறகு ஸ்வாகத பத்ரிகை அத்யக்ஷ ஸ்வாமிக்கு அளிக்கப்பட்டது பிறகு A. V. நரஸிம்ஹன் என்னும் வித்யார்த்தியால் ‘வைதிகவரிவஸ்யா’ என்பது பற்றி வ்யாஸம் படிக்கப்பட்டது. அத்யக்ஷ ஸ்வாமி, அநேக ப்ரமாணங்களால் ஷ விஷயத்தைப் பற்றியும், ஆசார்யனிடத்தில் சிஷ்யன் இருக்கவேண்டியதைப் பற்றியும், ஸ்ரீ அழகிய சிங்கரின் ப்ரபாவத்தைப் பற்றியும் மிகவும் அழகாக உபந்யஸித்தார்.

ஷ ஸபையில் ஸ்ரீ அழகிய சிங்கர் நியமநப்படி ‘கோ உஷிஜா’ ‘கோஸம்ரக்ஷணஸ்யாவஸ்யகதா’ என்பவைகளைப் பற்றி ‘ஸ்வாஸம்ரக்ஷணீ’ இத்யாதி ப்ரமாண புரஸ்ஸரம் உபந்யஸித்து, கோவதத்தைக் கண்டித்தும், கோவதத்தைத் தடை செய்யும்படி சட்டம் இயற்ற அரசாங்கத்தாரைக் கேட்டுக் கொள்வதாகவும் ஒரு தீர்மானத்தை நிறைவேற்றினர். ஸ்ரீ அழகிய சிங்கருடைய அநுக்ரஹ பூர்வமான மந்த்ராக்ஷதை ஸபையோர்க்குக் கொடுக்கப் பட்டது. கார்யதர்சி P. K. ராமபத்ரனுடைய க்ருதஜ்ஞதாவிஷ்கரணத்துடன் ஸபை இனிது முடிவுற்றது,

P. K. ராமபத்ரன்.
P. N. க்ருஷ்ணமாசாரி.
(கார்யதர்சிகள்.)

ஸ்ரீ:

ஸ்ரீமதே லக்ஷ்மீந்ருஸிம்ஹ பரப்ரஹ்மணே நம:

யோऽந்த: ப்ரவிஶ்ய மம வாசமிமாம் ப்ரஸுப்தாம்
ஸஞ்ஜீவயத்யகிலஶக்திதர: ஸ்வதாம்நா ।
அந்யாம்ஶ்ச ஹஸ்தசரணஶ்ரவணத்வகாதீந்
ப்ராணாந்நமோ பகவதே புருஷாய துப்யம் ॥

# ஸம்பாதகரின் குறிப்புக்கள்

**ஸ்ரீ அழகிய சிங்கரின் உத்தாந மஹோத்ஸவம்**

நிகழும் ஆவணி மீ 15வ ஞாயிற்றுக்கிழமை பௌர்ணமி தினம் ஸ்ரீ ஸந்நிதியில் ஸ்ரீ அழகிய சிங்கர், உத்தாநம் என்னும் மஹோத்ஸவத்தை அநுஷ்டித்தருளினர். ஸங்கல்பத்தின் உபக்ரம காலத்திலிருந்த ஸ்ரீ வைஷ்ணவ ஸம்ருத்தி இப்போது இராவிடினும், அந்தரங்கரான அநேக ஶிஷ்யர்கள் ஸந்நிஹிதராக இருந்தார்கள். உத்ஸவமும் யதாக்ரமம் நடைபெற்றது. ஸ்ரீ அழகிய சிங்கர் மடத்தை விட்டு அடுத்த க்ராமத்தைச் சேர்ந்த வஸந்த மண்டப மென்று சொல்லப்படும் ஸ்தலாந்தரத்துக்குப் பெரிய கோஷ்டிகளுடன் எழுந்தருளியாயிற்று. அவ்விடத்தில் அன்றும் மறுதினமும் எழுந்தருளி யிருந்து, திங்கள் ஸாயம் ஸூர்யாஸ்தமநத்துக்கு முன்னதாக அவ்விடமிருந்து மடத்துக்குத் திரும்பி எழுந்தருளியாயிற்று. இன்னும் கொஞ்ச காலம் திருவெவ்வுளூரிலேயே ஸ்ரீ லக்ஷ்மீ ந்ருஸிம்ஹனை ஏகாந்தத்தில் ஆராதித்துக் கொண்டு, பிறகு, ஸ்ரீ லக்ஷ்மீ ந்ருஸிம்ஹன் ஸங்கல்பித்தால், மறுபடியும் யாத்ரோத்ஸவத்தைச் செய்தருளும்படி யிருக்கு மென்று நாம் விச்வஸிக்கிறோம். அதற்குள், இப்பொழுது மஹா ஜநங்களை வருத்தி வரும் க்ஷோபங்களும் ஒரு விதமாக ஶமநத்தை அடையலாம். 'வர்ஷ: ப்ரஸீததாத்' என்பதே நம்முடைய ப்ரார்த்தனை.

*　　　　*　　　　*　　　　*

**துர்ப்பிக்ஷமும் மஹா ஜநங்களின் கஷ்டமும்**

ஜகத்தையும் அதிலுள்ள ஜநங்களையும் ஸ்ருஷ்டித்த ஈச்வரன், அந்த ஜநங்கள் எவ்வித கஷ்டமு மின்றிக்கே ஜீவித்து வருவதற்கு அபேக்ஷிதமான உணவுப் பொருள்களையும் பூர்ணமாக ஸ்ருஷ்டித்திருக்கிறான். இப்பொழுது ஸ்வல்ப காலமாக அந்த உணவுப் பொருள்கள், ஜகத்திலுள்ள ஜநங்களுக்கு அபர்யாப்தமாய்ப் போய் விட்டன. இதன் காரணம் யாதென்பது ஒருவருக்கும் விளங்கவில்லை. ஜநங்களோ பசியினால் வருந்தினவர்களாய் ஆயிரக்கணக்காய் மடிகிறார்க ளென்று நாம் அறிகிறோம். நமது தேஶத்தில் இரண்டு வருஷங்களுக்கு முன், வட இந்தியாவில் பங்காளத்தில் லக்ஷக்கணக்கான ஜநங்கள் ஆஹாரம் கிடைக்காமையால் உயிர் துறந்தன ரென்பது ப்ரஸித்தம். இப்பொழுது மறுபடியும் அந்தத் துர்ப்பிக்ஷம் ஸம்பவிக்கும்போல் இருக்கிறது. இந்த க்ஷணம் பர்யந்தம் பஞ்சத்தை அதிகமாக அறியாத இந்தத் தென் இந்தியாவிலும் அது தலையெடுத்தாடு மென்று எல்லாரும் பயப்படுகிறார்கள். இப்பொழுது கைவஶம் இருக்கும் உணவுப் பொருள்

189238

இன்னும் 10 அல்லது 20 நாட்களில் செலவாகிவிடு மென்றும், அதற்குப் பிறகு ஜநங்களுக்கு உணவுப் பொருளை எங்கிருந்து ஸம்பாதித்துக் கொடுக்கலாம் என்றும் ராஜாங்கத்தார் கவலையுடன் அலைகிறார்கள். இப்பொழுது க்ருஷி செய்யப்பட்டுள்ள பூமியிலிருந்து தாந்யம் நமக்குக் கைவசம் வருவதற்குக் குறைந்த பக்ஷம் இரண்டு மாஸ காலமாகுமே. இந்த இரண்டு மாஸப் பொழுது எப்படிப் போகும்? வர்ஷாந்த செலவை உத்தேசித்துச் சென்ற அறுவடைக் காலத்தில் தாந்யத்தைச் சேர்த்து வைத்திருக்கும் ஜநங்கள் நீங்கலாக, மற்ற ஜநங்கள் என்ன செய்யப் போகிறார்களோ அறியோம். அப்பொழுதைக் கப்பொழுது கடைகளில் தாந்யங்களை விலைக்கு வாங்கி ஜீவித்துவரும் ஜநங்களே அதிக மாதலால், அவர்களுக்குள் ஹாஹாகாரம் அதிகப்பட்டு ஜகத்தில் குழப்பம் அதிக மாகிவிடு மன்றோ? க்லேஶம் அஸஹ்ய மாகிவிட்டால் ந்யாயாபந்யாயங் களின் விசாரம் புத்தியில் ப்ரவ்ருத்திக்குமோ? பசி வந்திடப் பத்தும் பறக்கு மல்லவா? ஜநங்கள் பசியின் க்லேஶம் தாங்காமல் திருட்டிலும் புரட்டிலும் இறங்கிவிட வன்றோ நேரிடும்? இவை ஒன்றும் நேராதபடி அநுகூலிக்கப் பகவானை ப்ரார்த்திப்பதைத் தவிர்த்து நம்மால் யாது செய்ய இயலும்?

* * * *

**ஸ்வராஜ்யமும் தேசத்தின் துஸ்திதியும்**

பஹு காலமாக நமது பெரியோர்கள் செய்துவந்த ப்ரார்த்தனைக்கு இணங்கி இங்க்லீஷ்காரர்கள் நமது தேஶத்து ராஜ்ய பரிபாலநத்தை நம்மிடம் ஒப்புவித்துவிட்டு, அவர்கள் இந்தத் தேஶத்தை த்யஜித்துத் தமது தேஶம் போய்ச் சேர்ந்தார்கள். அவர்கள் விலகி விட்டால் ராஜ்ய நிர்வாஹம் தம்மிடம் வந்துவிடு மென்றும், அதனால் தமது தேஶத்துக்குப் பெரிய க்ஷேமம் ஏற்படு மென்றும், மஹா ஜநங்க ளெல்லாரும் எவ்வித கஷ்டமு மின்றிக்கே ஸுகமாக வாழ்ந்து வருவார்க ளென்றும், இம்மாதிரியான பல மநோரதங்கள் இந்தச் சீர்த்திருத்தக்காரருடைய சித்தத்தில் மலிந்திருந்தன. இப்போது பார்த்தால், அவர்களுடைய மநோரதங்க ளெல்லாம் அவர்களால் எதிர்பார்க்கப்படாத அநிஷ்டமான ஒரு முடிவை அடைத்துவிட்டன. 'ஜநோ ஹ்யந்யச் சிந்தயதி ஸ்வஸ்தம் விதிரந்யதைவ' [ஜநங்கள் ஒருவிதமாக நினைக்கி றார்கள்; நான் எனக்குத் தோன்றும் ப்ரகாரம் கார்யங்களை முடிக்கிறேன்] என்றன்றோ பகவான் அநுக்ரஹித்திருக்கிறான்?

* * * *

**தேசப் பிரிவினையும் அதன் பயனும்.**

நமது தேஶத்தில் துருஷ்க ஜாதியைச் சேர்ந்த அநேக ஜநங்கள் பஹு காலமாக நம்முடன் ஸஹவஸித்து வந்திருக்கிறார்க ளென்பது எல்லோருக்கும் தெரிந்த விஷயம். ஆதிகாலத்தில் அவர்களுக்கும் நமக்கும் ஸ்வல்ப சச்சரவு இருந்தபோதிலும், பிறகு ஒத்து வாழ்வதால் நமக்குள் பரஸ்பரம் நன்மை ஏற்படும் என்று புத்தியில் ஊன்றினவாறே நாம் ஒருவர்க் கொருவர் ஸௌஹார்த்தத்துடன் வர்த்தித்து வந்தோம். ஸமீப காலத்தில் துருஷ்கர்களுள் சில பெரியோர்கள், தமக்குத் தனியாக ஒரு ராஜ்யம் இருந்தால், அது அநேக விஷயங் களில் தமக்கு அநுகூலமா யிருக்கு மென்றெண்ணி, இந்தத் தேஶத்தில் தமக்கு

ஓர் உரிமை இருக்கிறதென்றும், அந்தக் காரணத்தால் இந்தத் தேசம் இரண்டு பாகமாகப் பிரிக்கப்பெற்று, ஒரு பாகம் தமக்காகவும் மற்றென்று இதர ஜாதியர்க்காகவும் ஸ்வாதீநமாகச் செய்யப்படவேண்டுமென்றும், இவ்வாறு பெரியதொரு கிளர்ச்சியைச் செய்து வந்தார்கள். அந்த எண்ணம் அவர்களைச் சேர்ந்த மற்றவர்களிடமும் தீவ்ரமாகப் பரவி, நமக்குள் பரஸ்பர மிருந்த ஸௌஹார்த்தத்தை மிகவும் குலைந்து விட்டது. இந்த ஸந்தர்பத்தில்தான் இங்க்லீஷ்காரர்கள் ராஜ்யத்தைத் துறந்து போகும்படி ஸம்பவித்தது. அவர்கள் அப்படிப் போகும்போது, நமக்குள் இருக்கும் சச்சரவைப் பார்த்து, துருஷ்கர்கள் கேட்கும் ப்ரகாரம் ராஜ்யத்தை பிரித்துக் கொடுக்காவிட்டால் பெருத்த கலஹம் ஏற்படுமென்று பயந்து, இரண்டு கக்ஷியிலும் ப்ரதாந வ்யக்திகளுடன் கலந்து ஆலோசித்து, ஒரு விதமாகத் தேசத்தை பிரித்து, மேற்குப் பஞ்சாபில் ஒரு பாகமும் கிழக்குப் பங்காளத்தில் ஒரு பாகமும் துருஷ்கர்களுடையன வென்று நிர்ணயித்து, அம்மாதிரி ஒரு வ்யவஸ்தையைச் செய்து விட்டுப் போனார்கள்.

ஒரு குடும்பத்தில் இரண்டு புத்ரர்கள் சண்டை செய்துகொண்டால், பிதாவாக இருப்பவன் அவர்களைப் பிரித்து வைப்பதே உத்தமமான மார்க்கம். ஆனால் அவர்களுக்குள் சச்சரவு மறுபடியும் நேராமல் இருக்கவேண்டுமானால் அவர்களுக்குள் எவ்வித ஸம்பர்க்கமும் நேராமல் அவர்களை வ்யவஹிதமாக வைக்கவேண்டியது அவச்யம். அம்மாதிரி இந்தத் துருஷ்கர்களையும் மற்றவர்களையும் தூர விலக்கி வைத்திருந்தால் நமக்குள் சச்சரவு நின்றே போயிருக்கும். அப்படி விலக்கி வைக்க ஸாத்ய மிராததால், பலிஷ்டர்கள் துர்ப்பலர்களை ஹிம்ஸிக்கவும், அதனால் தேசத்திற்கே பெரிய க்ஷோபத்தை ஜநிப்பிக்கவும் இடம் உண்டாய் விட்டது. ஹிம்ஸையில் உத்ஸாஹமுள்ள அநேக துஷ்டர்கள் கூட்டங் கூட்டமாகச் சேர்ந்து க்ராமங்களில் புகுந்து ஜநங்களைக் குடும்பங் குடும்பமாகக் கொலை செய்வதுடன், வீடுகளில் தீயிட்டும், ஸ்த்ரீகளை அபஹரித்தும், மநஸ்ஸால் நினைப்பதற்குக்கூட அஸஹ்யமான அட்டூழியங்களைச் செய்தும் வருகிறார்களென்று திநசரிப் பத்ரிகைகளில் காணப்படும் அறிக்கைகளினின்று நாம் அறிகிறோம். ஹிம்ஸையை ஸர்வ ப்ரகாரத்தாலும் வர்ஜிக்கவேண்டுமென்று உபதேசித்து வரும் மஹாத்மா காந்தி முதலான ஸாதுக்களின் வார்த்தையில் விச்வஸித்த ஹிந்துக்களும், அவர்களைப் போன்ற மற்றவர்களும், இந்தத் துஷ்டர்களின் கொடுமைக்கு இரையாகி அநேகர் உயிர் துறந்தார்களாம். நாசமடையாமல் தப்பித்து ஓடிவந்தவர்கள் மஹத்தான துக்கத்திற்கும் கஷ்டத்திற்கும் பாத்ரமாகிப் போக்கிடம் தெரியாமல் பல விடங்களிலும் ஓடி ஒளிந்து கஷ்டப்படுகிறார்களாம். அப்படி சரணார்த்திகளாக ஓடிவந்திருப்பவர்களை ஆயிரக்கணக்காக நாம் நேரில் பார்க்கலாம். இந்தக் கஷ்டத்தை நேரில் பார்த்த நமது முக்ய மந்த்ரி, தாம், பதினாயிரம் அகதிகளைத் தமது ராஜதாநிக்கு அழைத்து வந்து, தம்மால் இயன்ற வளவு அவர்கட்கு உதவி செய்வதாக அங்கீகரித்திருக்கிறார். மற்றை ராஜதாநிகளிலும் இம்மாதிரி பல விதமாக உபகாரங்கள் நடந்து வருகின்றனவாம். ப்ராயேண, ந்யஸ்த தண்டர்களான ஜநங்களே இதில் துக்க பாகிகளென்று தெரியவருகிறது. இந்தக் கஷ்டம் எப்படி

நிவ்ருத்தமாகு மென்பது நமக்குத் தெரியவில்லை. ஏதோ பெரியதொரு க்ஷேமம் வரப்போகிற தென்று நாம் நினைத்துக் கொண்டிருக்க, அதற்கு மாருக ஜனங்களுக்கே நாசம் வந்துவிட்டதே என்று நாம் வ்யஸனிக்கிறோம்.

"ஒரு வண்டு ஸாயங்காலத்தில் ஒரு தாமரைப் பூவில் உட்கார்ந்திருக்கும் பொழுது, திடீரென்று ஸூர்யன் அஸ்தமிக்க, அந்தத் தாமரைப் புஷ்பம் மூடிக்கொண்டு விட்டது. அதில் அகப்பட்டுக்கொண்டிருந்த வண்டு, 'இரவு சீக்ரத்தில் போய்விடும்; ஸூர்யன் உதயமாகி விடுவான்; தாமரைப் புஷ்பம் மலரும்; அப்போது நமக்கு க்ஷேமம் எற்படும்' என்று நினைத்திருக்கையில், ஒரு மதம் பிடித்த யானை அந்த ஸரஸ்ஸில் புகுந்து அதிலுள்ள நீரைக் கலக்கித் தாமரைத் தண்டுகளைப் பிடுங்கி நாலாபக்கங்களிலும் சிதறியடித்துவிட்டுப் போயிற்று" என்று ஒரு கதை சொல்வார்கள்.

["ராத்ரிர் கமிஷ்யதி பவிஷ்யதி ஸுப்ரபாதம்
பாஸ்வாநுதேஷ்யதி ஹஸிஷ்யதி பங்கஜஸ்ரீ: ।
இத்தம் விசிந்தயதி கோசகதே த்விரேபே
ஹா ஹந்த ஹந்த நளிநீம் கஜ உஜ்ஜஹார ॥"]

இம்மாதிரி இருக்கின்றது நம்முடைய ஸ்திதி.

* * *

## ஒரு விஜ்ஞாபநம்

ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியாவின் எட்டாவது ஸஞ்சிகையில், ஸம்பாதகரின் குறிப்புக்களில், "ஹரிஜந ப்ரவேசமும் தைவ ஸாந்நித்யமும்" என்னும் தலைப்பின் கீழ், நாம் ப்ரசுரப்படுத்தியுள்ள குறிப்புக்களை, 'ஸாக்ஷாத் ஸ்ரீ அழகிய சிங்கருடைய திருவுள்ளம் இதுதான்' என்று நாம் சொல்லாம லிருக்க, சிலர் அதனை 'ஸ்ரீ அழகிய சிங்கருடைய திருவுள்ளமே' என்று அந்யதா க்ரஹணம் பண்ணியிருப்பதாக அறிகிறோம். நாம் ஷை தலைப்பில் எழுதி யிருக்கும் விஷயங்கள், ஸ்ரீ ஸந்நிதியில் நடந்தேறிய ஸதஸ்ஸில் நிகழ்ந்த நடவடிக்கைகளிலிருந்து கர்ணாகர்ணிகமாக க்ரஹிக்கப்பட்டனவே யன்றி, அவை நம்மால் நிஷ்க்ருஷ்டமாக அறியப்பட்டவையல்ல. 'ஸ்ரீ அழகிய சிங்கரின் திருவுள்ளம் இதுதான்' என்று நாம் ஓரிடத்திலும் கூறவுமில்லை. இது விஷயமான ஸ்ரீ ஸந்நிதியின் ஸ்பஷ்டமான நிர்ணயத்தை நாம் ப்ரதீக்ஷித்துக்கொண்டிருக்கிறோம் என்று எழுதி யிருப்பதையும் நம் ஸஹ்ருதுக்கள் அறியவேண்டும்.

வஸ்துஸ்திதி இவ்வாருக: ப்ரக்ருத விஷயமாய் ஸம்பாதகரின் குறிப்புக்களில் நாம் எழுதியிருப்பதை ஸ்ரீ அழகிய சிங்கரின் அபிப்ராயமாகச் சிலர் க்ரஹித்திருப்பதாய்க் கேள்விப்பட்டதிலிருந்து, அவர்கள் அவ்வாறு ஸந்தேஹிப்பதற்கு அடியேனுடைய பதாசனை இடங்கொடுத்து விட்டதே யென்று நாம் மிகவும் சோகிக்கிறோம். ஸதஸ்ஸில் செய்யப்பட்டிருப்பனவாக அடியேன் கேள்விப்பட்ட நிர்ணயங்களை எழுதுகையில், 'அந்த ப்ராயச்சித்தமும் ஆராதநத்திலேயே அந்தர்ப்பூதம்' என்று பங்க்தி காணப்படுகிறது. இந்த வாக்யத்தில் ப்ரயோகிக்கப்பட்டிருக்கும் 'அந்தர்ப்பூதம்' என்பதற்கு 'ஸமகாலமாகச் செய்யப்படும்' என்பதே பொருள்.

[Grantha text] — நாம் செய்துள்ள பாபங்கள் மிக க்ரூரமானவை; அவை பல. அவ்வளவையும் இந்த ஸ்தோத்ரத்தின் அநுஸந்தாநம் நசிப்பித்து விடும். '[Grantha text]' என்று அநுக்ரஹித்தவனன்றோ நமது பகவான்? இந்தப் பாபங்களை யானைகளாகப் பேசுவது, பகவானை '[Grantha text]' என்னும் வர்ணநத்துக்கு அநுரூபமானது.

[Grantha text]—பிளக்கிறவன்; இது, 'ஹிரண்யனுடைய மார்பைப் பிளந்த நரஹரியன்றோ இவன்' என்பதை ஜ்ஞாபிக்கிறது.

[Grantha text] — ஆச்ரிதர்களுக்குப் பகவான் செய்யும் இஷ்டபூர்த்தி, அநிஷ்ட நிவ்ருத்தியை முன்னிட்டுக் கொண்டே இருக்கும். இவ்விடத்தில் பாபங்கள் போக்கப்படுவதைப் பற்றி முதலில் பேசி, பிறகே இஷ்டங்களைக் கொடுக்கவேண்டுமென்று ப்ரார்த்திக்கிறார்.

நமது ஆசார்யர்களால் அநுக்ரஹிக்கப்பட்டுள்ள ஸ்தோத்ரங்கள் அனைத்தும் பகவத் பக்தியின் பரீவாஹமாக வெளி வந்திருப்பவை யாதலால், அவைகளை அநுஸந்திப்பவர்க்கு, அவை அநிஷ்டங்களை நிவர்த்திப்பதுடன் இஷ்ட ப்ராப்தியையும் பரிபூர்ணமாகச் செய்யுமென்று அதை அறிந்தவர்கள் சொல்லியிருக்கிறார்கள். அதிலும் ஸ்ரீ தேசிகனுடைய திவ்ய ஸூக்திகளுக்கு இந்தச் சிறப்பு விசேஷமாக உண்டு. அபீதி ஸ்தவத்தின் அநுஸந்தாநத்தால், உபஸ்திதமான பயஹேதுக்கள் போன இடம் தெரியாமல் போவதும், ஸ்ரீ ஹயக்ரீவ ஸ்தோத்ரத்தின் அநுஸந்தாநத்தால் ஸம்ச்ரித காமதேநு ரூபமான ஸரஸ்வதீ நேர்வதும் ஸர்வ ஸம்ப்ரதிபந்நமான விஷயம். ப்ரக்ருதமான ஸ்ரீ காமாஸிகாஷ்டக ஸ்தோத்ரமும் அம்மாதிரியான மாஹாத்ம்யம் பொருந்தியது. அது மாத்ர மின்றிக்கே, மந்த்ர விசேஷங்கள் போல் ஸக்ருஜ் ஜப மாத்ரத்தாலே பரம புருஷார்த்தத்துக்கும் ஹேதுவாகின்றதென்பது, இதை ஊன்றிப் பார்க்குமவர்களுக்கு விளங்கும். பல ச்ருதியை அநுக்ரஹிக்கும் கடைசி ச்லோகத்தில் '[Grantha text]' ['[Grantha text]'] என்று அநுக்ரஹித்திருப்பதைப் பார்த்தால் சரம ச்லோகார்த்தமும், முதல் ச்லோகத்தில் '[Grantha text]' [ஜயஜய] என்று பல்லாண்டு பாடுவதான கைங்கர்யத்தைப்பற்றி ப்ரஸ்தாவித்திருப்பதைப் பார்த்தால் கைங்கர்யத்தை ப்ரார்த்திக்கும் த்வயத்தின் கருத்தும், ஸ்தோத்ரத்தை எட்டு ச்லோகங்களால் அமைத்திருப்பதைப் பார்த்தால் திருவஷ்டாக்ஷரத்தின் ஸ்வரூபமும் ப்ரத்யபிஜ்ஞாதங்களாகின்றன என்பதும் விளங்கும்.

நிற்க: ஸ்ரீ ந்ருஸிம்ஹாவதாரத்துக்கு மற்ற அவதாரங்களைக் காட்டிலும் விசேஷித்த ஆகாரம் ஒன்று உண்டு. 'மற்றை அபராதங்களெல்லாவற்றையும் பகவான் ஸஹித்தாலும் ஸஹிப்பன்; தனது பக்தர்களுக்கு ஆஸ்ராம்ஸம் பெற்றிருப்பவர்களிடமிருந்து க்லேசம் ஏதேனும் ஏற்பட்டால் அதைச் சற்றேனும் ஸஹியான்' என்னும் கல்யாண குணம் இந்த அவதாரத்திலேயே விசேஷித்து விளங்குகின்றது.

"[Grantha text]
[Grantha text] ।
[Grantha text]
[Grantha text] ॥"

[ஹே! வரத! ஹிரண்ய கசிபு உன்னிடத்தில் கணக்கற்ற அபராதங்களைச் செய்தான். அந்த அபராதங்களால் உன்னுடைய மநஸ்ஸில் ஒருவித விகாரமும் உண்டாகவில்லை.

அவன் ப்ரஹ்லாதனுக்கு க்லேசங்களைச் செய்ய ஆரம்பித்த உத்தர க்ஷணத்தில் அதை ஸஹித்திருக்க அசக்தனாய், ஒரு ஸ்தம்பத்தில் திருவவதரித்து அந்த அஸுரனை ஸம்ஹாரம் செய்தா யன்றோ?] என்பது ஸ்ரீ கூரேசனுடைய அநுபவம்

இந்த ஸ்தோத்ரத்தில் விஷயங்களின் ஸங்கதியும் மிக்க அழகு வாய்ந்தது. முதலில் சேஷியினிடம் சேஷன் செய்யவேண்டிய 'நமோ ஊதெய்வ வாஜி நஃ' என்று பல்லாண்டு பாடுவதான வ்ருத்தி விசேஷம் சொல்லப்பட்டது. இரண்டாவது ச்லோகத்தில் 'அப்பல்லாண்டு பாடுவது உபநிஷத் ப்ரதிபாதிதனை மஹா புருஷனுக்கே' என்பது விவரிக்கப்பட்டது. மூன்றாவது ச்லோகத்தில், அவன் அப்படி உபநிஷத் ப்ரதிபாதிதனாக இருக்கையிலும், அவனுக்கு லீலாவிபூதியிலேயே ஆஸக்தி அதிகம் என்பது 'அவன் விமுகுவெகுண்ணவஹுமதி' என்பதால் விளக்கப்படுகிறது. அதாவது: முன் ச்லோகத்தால் பரத்வமும் இந்த ச்லோகத்தால் ஸௌலப்யமும் சொல்லப்பட்டதாகின்றன. ஆகையால் அவன் ஆச்ரயணீயன் என்பது ஸாதிக்கப்பட்டது. நாலாவது ச்லோகத்தால். அவன் அப்படி ஸுலபனாயிருப்பதன் காரணம், அவன் நமக்கு நிருபாதிக பந்துவாயிருப்பதே யாகையால், அவனை நாம் நிஸ்ஸங்கோசமாகவும் நிர்ப்பயமாகவும் ஆச்ரயிக்கலாமென்பது த்ருடீகரிக்கப்படுகிறது. ஐந்தாவது ச்லோகத்தில், ஆச்ரிதர்களுக்கு இஷ்டப்ராப்தியைச் செய்வதையே அவன் வ்ரதமாகக் கொண்டவன் என்பது வற்புறுத்தப்படுகிறது. ஆறுவதில், 'அவன் ஹிரண்யனை வதம் செய்தவ னன்றோ? அவனுடைய க்ருத்யத்தையும் அவன் எடுத்துக்கொண்ட ரூபத்தையும் ஆலோசித்து அப்படிப்பட்ட உக்ர ரூபத்தையும் நடத்தையையும் உடையவன் எப்படி ஆச்ரயணீய னவரன்?' என்று சங்கிப்பவர்களுக்கு, 'நமக்கு எப்பொழுதும் ரக்ஷகங்க ளல்லவோ அவனுடைய கைகள்! அவைகளைப் பார்த்து அவனை நிச்சயம் ஆச்ரயிக்கலாம்' என்று ஸமாதானம் சொல்லப்படுகிறது. ஏழாவது ச்லோகத்தில், 'அவன் தயாநிதி; அந்தத் தயை, ஒருவர்க்கு உக்ரமாக இருக்கும் வஸ்துவே மற்றொருவர்க்கு ஸௌம்யமாகிவிடும்' என்று நமக்குத் தைர்யம் சொல்லுகிறது. எட்டாவதில், 'மாமேகம் ஶரணம் வ்ரஜ' என்னும் ஸ்வதந்த்ர ப்ரபத்திக்கு முக்ய லக்ஷணமான அநந்ய கதித்வத்தைச் சொல்லி, பிறகு ஒன்பதாவது ச்லோகத்தால் அப்படி நிச்சித புத்தியுடன் சரணம் அடைபவனுக்குக் கிடைக்கும் பரம புருஷார்த்தமான பலத்தைச் சொல்லி ஸ்தோத்ரத்தைத் தலைக்கட்டுகிறார்.

ஸ்ரீமந் நிகமாந்த மஹா தேசிகனால் அநுக்ரஹிக்கப்பட்ட

## ஸ்ரீ காமாஸிகாஷ்டக ஸ்தோத்ர

வ்யாக்யாநம் ஸம்பூர்ணம்.

ஸ்ரீ:

ஸ்ரீமதே ஸ்ரீலக்ஷ்மீந்ருஸிம்ஹபரப்ரஹ்மணே நம:

ஸ்ரீவேகாஸேதுஸ்தோத்ரம் ॥

ஸ்ரீமாந் வேங்கடநாதார்ய: கவிதார்க்கிககேஸரீ ।
வேதாந்தாசார்யவர்யோ மே ஸந்நிதத்தாம் ஸதா ஹ்ருதி ॥

ஸ்ரீ:

ஸ்ரீமதே லக்ஷ்மீந்ருஸிம்ஹபரப்ரஹ்மணே நம:

# ஸ்ரீ வேகாஸேது ஸ்தோத்ரம்.

ப்³ரஹ்மணா ந்வயஸம்ஹூதோ வாஸுதேவோ யயாசதி ।
வேகாஸேதுஸ்ஸ்துதிவ்யாவ்யாம் குருதே ஸ்ரீஸஹாஷ்யா ॥

ஸ்வாயம் ச்ரூசதி முநீந்த்ரஹ்ருதயா: ஸ்வாத்யாயநிவேத்யார்த்த்ய
ஸ்தாஸாம் ஸாவமிநாவவணே வ்யயதகே திருஜ்ஞஸ்யாத்யுதவம் ।

மஜ்ஜாம் ஸேவிதுமச்ச கூர்ம்மரண: கிஞ்சாச ஸஞ்ஜஸ்ருதி
கிம் ஜிஹ்வேதி ந ஆவி ஸாஸமதீ தோஷஜ்ஞதோ விந்ததி ॥

ஸ்ரீ காஞ்சீ நகரில் உத்திரவேதியில் சதுர்முகனால் செய்யப்பட்ட அச்வமேத யாகத்தை, வேகவதீ யென்னும் நதியின் ப்ரவாஹத்திலிருந்து ஸம்ரக்ஷிக்கவேண்டுமென்னும் திருவுள்ளத்துடன் 'திருவெஃகா' என்னும் திருப்பதியில் 'ஸ்ரீ பகவான் அர்ச்சா ரூபியாகத் திருவவதரித்தான். புருஷகார பூதையான பிராட்டியுடன் திருவநந்தாழ்வானுகிற திருப்பள்ளி மெத்தையில், ஆச்ரித பரதந்த்ரனாய் யோக நித்ரை செய்துகொண்டிருக்கும் அந்தப் பகவானிடத்தில் தமக்குள்ள பக்தி பரீவாஹாத்மகமாக ஸ்ரீ தேசிகன் இந்த ஸ்தோத்ரத்தை அநுக்ரஹித்திருக்கிறார். "........ ஆதியயனுக் கருள் செய்தணையானான் தாதை யரவணையான் தான்" என்று அந்த நதியின் மத்யத்தில் அந்தப் பகவான் ப்ரஹ்மாவுக்கு அருள் செய்யத் திருவுள்ளம்பற்றி ஓர் அணையாக சயனித்துக் கொண்டிருக்கிற படியால் அவனுக்கு 'வேகாஸேது' என்னும் திருநாமம் நேர்ந்திருக்கிறது. "வேகாயா: ஸேது:— வேகாஸேது:" 'வேகவதியின் அணை' என்பது அச் சொல் தொடரின் பொருள். அவ்விதம் அவன் அவதரித்த வரலாறு ஸ்ரீ காமாஸிகாஷ்டக ஸ்தோத்ரத்தின் நான்காவது ச்லோக உரையின் கீழ் விவரிக்கப்பட்டிருக்கிறது.

இந்த எம்பெருமானுக்கு 'யதோக்தகாரீ' என்றும் மற்று மொரு திருநாமம் உண்டு. அந்தக் காரணத்தால் இந்த ஸ்தோத்ரம் 'யதோக்தகாரி ஸ்தோத்ரம்' என்றும் சொல்லப்படும். இந்த ஸ்தோத்ரத்தின் கடைசி ச்லோகத்தில், 'எந்த ஜனங்கள் இந்த வேகாஸேது ஸ்தோத்ரத்தை அநுஸந்தாநம் செய்கிறார்களோ, அவர்களுக்கு அந்தப் பகவான் அவர்கள் இடும் கட்டளைகளைச் செய்கிறார்' ['யதோக்தம் குருதே ஹரி:'] என்று ஸ்ரீ ஸ்வாமி இதை விவரித்திருக்கிறார். அதாவது: அந்தப் பகவான் அவ்வளவு ஆச்ரித பரதந்த்ரன் என்று சொல்லப் பட்டதாகிறது.

இது நிற்க: மற்றுமொரு ஐதிஹ்யமும் இந்தத் திருநாமம் வந்த காரணத்தை விளக்கும். காஞ்சீ நகரில் ஒரு ஸமயத்தில் பொய்கைக் கரையில், ஸ்ரீ திருமழிசையாழ்

வார் வெஃகாவில் துயிலமர்ந்த வேந்தை (பகவானை) ஸாக்ஷாத்கரித்துக்கொண்டு அங்கு யோகத்தில் எழுந்தருளியிருக்கையில், அப்பொழுது ஒரு கிழவி அவ்விடம் வந்து ஆழ்வாரை ஆச்ரயித்துப் பக்தியுடன் அவருக்கு ஶுச்ரூஷைகள் செய்துகொண்டிருந்தாள். யோகத்தில் எழுந்தருளியிருந்த ஆழ்வார் ஒரு நாள் திருக்கண்களை விழித்துப் பார்த்து, அக்கிழவியின் பக்த்யதிஶயத்தையும் கைங்கர்ய விஶேஷத்தையும் கண்டு போர உகந்து, அவளுடைய ப்ரார்த்தனையின் பேரில் அவளை ஸௌந்தர யுவதியாய் ஆகுமாறு குளிரக் கடாக்ஷித்தார். அக்கடாக்ஷ பலத்தின் அடியாக அவள் ஒரு ரூபவதியான யுவதியாக மாறிவிட்டாள். இந்த ஆச்சர்யத்தைக் கேட்ட அந்தத் தேசத்து அரசனான பல்லவராயன் தனக்கு நேர்ந்துள்ள கிழத்தனத்தைப் போக்கிக்கொள்ள விரும்பி, அவ்யுவதியை வரவழைத்து 'உனக்குப் போல் எனக்கும் யௌவநம் வரும்படி நீ செய்யவேண்டும்' என்று கேட்டான். அதற்கு அந்த யுவதி, 'திருமழிசையாழ்வாருக்குக் கணிகண்ணர் என்றொரு ஶிஷ்யர் இருக்கிறார்; அவர் உஞ்ச வ்ருத்தியால் ஜீவிக்கிறவர்; பகவத் பாகவத ப்ரதிபத்தியுள்ளவர்; அவரிடம் தங்களுடைய இஷ்டத்தைத் தெரிவித்தால் அவர் அதைப் பூர்த்தி செய்து வைக்கலாம்' என்று மறுமொழி சொல்லிப் போனாள். மறுநாள் அரசன் கணிகண்ணரை ஸந்தித்துத் தன் விருப்பத்தைத் தெரிவிக்க, கணிகண்ணர் அதற்கு இணங்காமல் மறுக்கவே, அரசன் சினந்து, அவரைத் தன் ராஜ்யத்தினின்று புறம் போகுமாறு கட்டளை பிறப்பித்தான். இச்செய்தியைக் கணிகண்ணர் ஸ்ரீ ஆழ்வாருக்குத் தெரிவிக்க, ஆழ்வாரும் தமது ஶிஷ்யரை விட்டுப் பிரிய மனமில்லாதவராய், தாமும் கூடப் புறப்பட உத்தேஶித்துத் திருவெஃகா நாயனார் முன்பே எழுந்தருளி, அவனைப் பார்த்து,

" கணிகண்ணன் போகின்றான் காமரு பூங்கச்சி
மணிவண்ணா நீகிடக்க வேண்டா—துணிவுடைய
செந்நாப் புலவனும் போகின்றேன் நீயுமுன்றன்
பைந்நாகப் பாய்சுருட்டிக் கொள்."

என்று விண்ணப்பம் செய்து கொண்டார். இதைக் கேட்ட எம்பெருமான் தனது பக்தனை விட்டுப் பிரியகில்லாது ஆழ்வார் விண்ணப்பம் பண்ணிக்கொண்ட விதமே அவர் பின்னே எழுந்தருளக் கச்சி நகரம் பாழடைந்தது. மறுநாள் அர்ச்சக பரிசாரகர்கள் வழக்கம்போல் திருவாராதநம் செய்வதற்கு ஸந்நிதிக்கு வந்து பார்க்க, பகவானைக் காணாமையால் மனம் திடுக்கிட்டு அச்செய்தியை அரசனிடம் தெரிவித்தார்கள். அரசன் தன் மந்த்ரிகளுடன் பகவானைப் பின் தொடர்ந்து ப்ரார்த்தித்தான். பகவானும் 'கணிகண்ணன் வந்தால் நாம் வருகிறோம்' என்று தனது வாத்ஸல்யம் தோன்ற நியமிக்க, அரசன் கணி கண்ணரிடம் போய்த் தான் அறியாது செய்த அபராதத்திற்கு க்ஷாபணம் செய்து கொண்டு' மீண்டும் நகர்க்கு எழுந்தருளவேண்டும்' என்று ப்ரார்த்தித்தான். கணிகண்ணன், அவன் செய்த பிழையைப் பொறுத்து மீண்டும் நகர்க்கு எழுந்தருள இசைந்து ஆழ்வாரை வேண்டிக்கொள்ள ஆழ்வாரும் மீண்டும் எழுந்தருளத் திருவுள்ளங் கொண்டு பகவானிடம் போய்,

" கணிகண்ணன் போக்கொழித்தான் காமரு பூங்கச்சி
மணிவண்ணா நீகிடக்க வேண்டும்—துணிவுடைய
செந்நாப் புலவனும் போக்கொழிந்தேன் நீயுமுன்றன்
பைந்நாகப் பாய்படுத்துக் கொள். "

என்று விண்ணப்பம் செய்து கொண்டார். எம்பெருமான், ஆழ்வாரது ப்ரார்த்தனைக் கிணங்கி மீண்டும் எழுந்தருள, நகரமும் முன்போல் ஶோபை யுடையதாயிற்று. இப்படி ஸ்ரீ ஆழ்வார் சொன்னவண்ணமே இந்தப் பகவான் செய்து வந்தனராதலால் இவர்க்கு 'யதோக்தகாரீ' என்று திருநாம மாயிற்று.

## ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியாவின் '47 ஆகஸ்டு மாஸத்துச் சந்தா வரவு

| | | | ரூ. |
|---|---|---|---|
| 49 | ஸ்ரீ. | K. ஸ்ரீநிவாஸ கோபாலையங்கார், C. R. S. கோயம்பத்தூர் | 3 |
| 112 | ,, | V. நாராயணையங்கார், விச்வேச்வரபுரம், பெங்களூர் | 3 |
| 113 | ,, | V. கோபாலஸ்வாமி ஐயங்கார், விச்வேச்வரபுரம், பெங்களூர் | 3 |
| 123 | ,, | S. ரங்கஸ்வாமி ஐயங்கார், த்யாகராயநகர், சென்னை | 3 |
| 137 | ,, | P. S. கோவிந்தையங்கார், ஸ்ரீரங்கம் | 3 |
| 157 | ,, | N. நாராயணையங்கார், கல்கத்தா | 3 |
| 221 | ,, | R. வேங்கடேச ஐயங்கார், சிதம்பரம் | 3 |
| 239 | ,, | T. R. வெங்கடாசார்யர், புதுக்கோட்டை | 3 |
| 279 | ,, | K. S. கோபாலஸ்வாமி, மயிலாப்பூர் | 3 |
| 306 | ,, | K. R. ராமாநுஜம், மயிலாப்பூர் | 3 |
| 443 | ,, | P. N. சேஷையங்கார், ஸ்ரீரங்கம் | 3 |
| 454 | ,, | P. நரஸிம்ஹாசார்யர், P.T., சென்னை | 5 |
| 561 | ,, | R. ஜகந்நாதையங்கார், கல்கத்தா | 3 |
| 563 | ,, | A. R. கோவிந்தாசார்யர், பெல்லாரி | 6 |
| 656 | ,, | K. ஆராவமுதன், கல்கத்தா | 3 |
| 658 | ,, | M. R. சாரி, கல்கத்தா | 3 |
| 691 | ,, | S. க்ருஷ்ணையங்கார், கல்கத்தா | 3 |
| 695 | ,, | செயலாளர், ஸ்ரீ வைஷ்ணவ ஸித்தாந்த ஸபை, கல்கத்தா | 3 |
| 706 | ,, | S. ஸ்ரீநிவாஸன், கல்கத்தா | 3 |
| 757 | ,, | S. D. ஸுந்தரராஜையங்கார், தேவக்கோட்டை | 3 |
| 782 | ,, | திருநெல்வேலி. ராஜகோபாலாசார்யர், சைதாப்பேட்டை | 2 |
| 783 | ,, | S. ஸ்ரீநிவாஸவரதன், மேல்மரம்பலம் | 2 |
| 784 | ,, | S. திருமலை ஐயங்கார், செம்பூர் பம்பாய் S. D. | 3 |
| 785 | ,, | ராவ்பஹதூர். C. V. விஜயராகவாசார்யர், பம்பாய் [illegible] கோட்டை | 3 |
| | | மொத்தம் ரூ. | 75 |

குறிப்பு:—சென்ற மாதத்துச் சந்தா வரவில், 670 'ஸ்ரீ. K. ராஜகோபாலையங்கார்' என்றிருப்பது பிழை; 670. 'ஸ்ரீ. T. V. ராஜகோபாலையங்கார்' என்பது திருத்தம்.

[ஸம்பாதகர்.]

Regd. M. 4437.

ஸ்ரீ:

ஸ்ரீமதே லக்ஷ்மீந்ருஸிம்ஹ பரப்ரஹ்மணே நம:

ஸ்ரீ அஹோபில மடத்தில் அச்சிடப் பெற்ற
கீழ்க் கண்ட புஸ்தகங்கள் 'ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியா' ஆபீஸில்

## விற்பனைக்குத் தயாராயிருக்கின்றன.

| | சந்தாதாரர்களுக்கு ரூ. அ | மற்றவர்கட்கு. ரூ. அ. |
|---|---|---|
| 1. ஸ்ரீ அதிகரண ஸாராவளி (தேவநாகர லிபி) [சிந்தாமணி, கல்பதரு வ்யாக்யாநத்துடன் காலிகோ பயிண்ட் செய்தது] | 6—8 | 7—8 |
| 2. உக்தி நிஷ்டாபரணம் ந்யாஸ நிஷ்டா மீமாம்ஸா ச (க்ரந்த லிபி) | 0-12 | 1—0 |
| 3. உக்தி நிஷ்டாபரணோத்யோதம் ,, | 0—8 | 0-12 |
| 4. வீக்ஷாரண்ய க்ஷேத்ர மஹாத்ம்யம் மணிப்ரவாள வ்யாக்யாநம் (க்ரந்த லிபி) | ... 1—0 | 1—8 |
| 5. ந்யாஸ நிர்ணயம் (க்ரந்த லிபி) | ... 0—8 | 0-12 |
| 6. ஸ்ரீ வீரராகவ ஸ்வாமி ஸுப்ரபாதம் (க்ரந்த லிபி) | 0—3 | 0—4 |
| 7. ஸ்ரீராமாநுஜ ஸித்தாந்த ஸங்க்ரஹம் (க்ரந்த லிபி) | 2—0 | 3—0 |
| 8. ஈஶாவாஸ்ய, கேந, கடோபநிஷத் (நாகர லிபி, தமிழ் மொழி பெயர்ப்புடன், 160 பக்கம்) | 1—0 | 1—8 |

(தபால் செலவு வேறு)

வேண்டுபவர்கள்

**மானேஜர், ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியா ஆபீஸ்,**

**நெ. 22, மஹாலக்ஷ்மி தெரு, தியாகராய நகர், சென்னை.**

என்னும் விலாஸத்திற்கு எழுதிப் பெற்றுக் கொள்ளலாம்.

---

Printed by T. A. P. Srinivasavaradachariar, at Sri Sudarsana Press, 14, Sannidhi Street, L. Conjeeveram. Q. H. Ct. 36, (Supply) Edited and Published by S. Vasudevachariar, 22, Mahalakshmi Street, Tyagarayanagar, Madras.

Regd. M. 4437.

26 APR 1947

ஸ்ரீ:

ஸ்ரீமதே லக்ஷ்மீந்ருஸிம்ஹ பரப்ரஹ்மணே நம:

ஸ்ரீ அஹோபில மடத்தில் அச்சிடப் பெற்ற

கீழ்க் கண்ட புஸ்தகங்கள் 'ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியா' ஆபீஸில்

# விற்பனைக்குத் தயாராயிருக்கின்றன.

| | சந்தாதாரர்களுக்கு ரூ. அ | மற்றவர்கட்கு ரூ. அ. |
|---|---|---|
| 1. ஸ்ரீ அதிகரண ஸாராவளி (தேவநாகர லிபி) [சிந்தாமணி, கல்பதரு வ்யாக்யாநத்துடன் காலிகோ பயிண்ட் செய்த] | 6—8 | 7—8 |
| 2. உக்தி நிஷ்டாபரணம் ந்யாஸ நிஷ்டா மீமாம்ஸா ச (க்ரந்த லிபி) | 0-12 | 1—0 |
| 3. உக்தி நிஷ்டாபரணோத்யோதம் ,, | 0—8 | 0-12 |
| 4. வீக்ஷாரண்ய க்ஷேத்ர மஹாத்ம்யம் மணிப்ரவாள வ்யாக்யாநம் (க்ரந்த லிபி) | ... 1—0 | 1—8 |
| 5. ந்யாஸ நிர்ணயம் (க்ரந்த லிபி) | ... 0—8 | 0-12 |
| 6. ஸ்ரீ வீரராகவ ஸ்வாமி ஸுப்ரபாதம் (க்ரந்த லிபி) | 0—3 | 0—4 |
| | 2—0 | 3—0 |

## ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியாவின் '47 ஜுலை மாஸத்துச்

## சந்தா வரவு

| | | | ரூ. |
|---|---|---|---|
| 12 | ஸ்ரீ. | R. ஸ்ரீநிவாஸன், மாதுங்கா, பம்பாய் .... .... | 3 |
| 28 | ,, | K. நரஸிம்ஹாசார்யர், மாதுங்கா, பம்பாய் .... .... | 1 |
| 135 | ,, | T. மாணிக்க நாயகர், செவ்வாபேட்டை ... .... | 3 |
| 146 | ,, | R. நரஸிம்ஹ ஐயங்கார், B.A., B.L., ஸுல்டான் பஸார், ஹைதராபாத் ... | 5 |
| 154 | ,, | T. K. ஐயாவையங்கார், திருப்பளாத்துறை.... ... | 3 |
| 155 | ,, | T. S. நாராயணையங்கார், திருப்பளாத்துறை.... ... | 3 |
| 179 | ,, | K. R. ராமஸ்வாமி ஐயங்கார், திருவல்லிக்கேணி ... | 3 |
| 224 | ,, | T. N. வானமாமலை ஐயங்கார், ராஜபாளையம் ... | 3 |
| 264 | ,, | C. R. க்ருஷ்ணமாசார்யர், கடலூர், N. T. .... ... | 3 |
| 265 | ,, | S. ராமஸ்வாமி ஐயங்கார், பல்லாவரம் ... .... | 3 |
| 269 | ,, | ஸ்ரீநிவாஸ கோபாலாசார்யர், புதுக்கோட்டை ... | 3 |
| 473 | ,, | V. க்ருஷ்ணஸ்வாமி ஐயங்கார், மேல் மாம்பலம் .... | 6 |
| 557 | ,, | R. சேஷையங்கார், ஸ்ரீவில்லிபுத்தூர் ... ... | 3 |
| 611 | ,, | R. ராமரத்நம் ஐயங்கார், தாதாநகர் ... ... | 5 |
| 621 | ,, | T. T. ஸ்ரீநிவாஸாசார்யர், பீளமேடு .... | |
| 651 | ,, | R. ரகுநாத [illegible] | |